குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | பிரமோதூத ஆண்டு வைகாசித்திங்கள் 10-6-90 | இதழ் 7

தருமை ஆதீனம் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவில்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அடியார்களும்
அன்பர்களும் புடைசூழப்
பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்
16-5-90

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 || 10-6-90 இதழ் 7

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஆட்சியர், அரசு, அறநிலையப்பணியாளர் சிந்தனைக்கு	... 297
2	கோவில் நிலங்களுக்குக் குத்தகைப் பாக்கி ரூ. 40 கோடி	... 304
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 305
4	தொகையடியார்	... 311
5	காவியத்தில் திருப்புமுனைகள்	... 313
6	தேவார உவமை	... 316
7	பார்வையாளர் குறிப்பு	... 319
8	நம்மைப் பேணும் அம்மை	... 320
9	பதிகப் பெருவழி காட்டிய பாவலர்	... 324
10	கடிதம்	... 326, 332
11	ஸ்ரீ கங்காளமூர்த்தி	... 327
12	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	... 329
13	செய்திகள்	... 333
14	எதிர்காலம்	... 340
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி VI. பாடம்-2	... 345

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தோன்றுபர மாநந்தச்
  சோதியன்றி நின்னறிவில்
தோன்றுசுக முண்டென்றுஞ்
  சுத்தப்பொய்-தோன்று மின்பம்
ஈச னுயிரறிவ
  தீதன்றி வேறுண்டேல்
பாசமலா தேதுண்டு பார்.

— முத்திநிச்சயம் 11

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 7

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - வைகாசி - 10—6—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஆட்சியர், அரசு, அறநிலையப்பணியாளர் சிந்தனைக்கு

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள; வாரி வளங்குன்றும்;
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி;
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

— திருமூலர் திருமந்திரம்.

உபதேசம் :

திருமூலர் கி. பி. மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று சிலரும், ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று சிலரும் குறிக்கின்றனர். எப்படி இருப்பினும் அவர் காலத்தில் ஆலயப் பூசைகட்குக் குறைஏற்பட்டது என்பது அவர் அருளியதிருமந்திரத்தால் புலனுகிறது. ஆலய பூசை முட்டுப் பட்டால் நாட்டிற்கு நல்லதல்ல என்னும் அவர் உபதேசத்தையே தலைப்பில் வெளியிட்டிருக்கிறோம். அனைவரும் இம்மந்திரத்தைச் சிந்தித்துச் செயல் பட்டுச் சிறப்புறுவோம்.

நித்திய பூஜைக்குத் தடையா ?

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் சமயம் சார்ந்த பக்தி நிலையங்களாக மட்டும் திகழ்வன அல்ல. அவை, நம் முன்னோர்களின் கலைவளம், கலாசாரப் பெருமிதம், பண்பட்டு வாழ்வியல், சமூக ஒழுக்கம் முதலியவற்றின் அழியாச்சான்றுகளாகவும் திகழ்வன. இவற்றை அளப்பரிய பக்தி மிக்க தமிழ் மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும், பெருஞ் செல்வர்களும் கட்டி வழங்கியதோடு, இவற்றின் நித்திய, நைமித்திக் பூஜைகளுக்காகப் பெரும் நிலக் கொடைகளையும் வழங்கிப் போந்தனர். மகளிரும், சாதாரணக் குடிமக்களும், கோயில் பணியாளர்களும் கூட, பல்வேறு அறக் கொடைகளை ஆலயங்களுக்கு வழங்கினர். தமிழ் நாட்டுத் திருக் கோயில் வரலாற்றிலேயே இல்லாத ஒன்றாக, ஆலயப் பணியாளர்களின் வேலைநிறுத்தம் 90ல் நடைபெற்றது. சில ஆலயங்களில் நித்திய பூஜைகளில் ஓரிரு காலங்கள் நிறுத்தப்பட்டன. பக்தர்களை இந் நிகழ்ச்சி பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இந்நிலையில் அரசினர் – ஆலயப் பணியாளர்களின் சிந்தனைக்கு ஞானசம்பந்தம் பல உண்மைகளை மன நெகிழ்வுடன் முன் வைக்க விரும்புகின்றது.

கொடுப்பர், எடுத்திலர் :

தமிழ் நாட்டு ஆலயங்கள், பெரும்பாலும் அவற்றிற்குரிய நிலபுலன்களின் வருவாயைக் கொண்டு, பல நூற்றாண்டுகளாகச் சிறப்பாகப் பராமரிக்கப்பெற்று வந்துள்ளன. அரசோச்சிய மன்னர்களும், வள்ளல்களும், செல்வர்களும், அறநிலையத் தலைவர்களும் முட்டுப்பாடற்ற நித்திய பூஜைகள் நிகழ அருந்தொண்டாற்றினர். இவர்கள் கோயில்களுக்குத் தங்கள் செல்வத்தைக் கொடுத்தவர்களே அல்லாமல், கோயிலிலிருந்து யாதொன்றையும் எடுத்தவர்கள் அல்லர். வாழ்க்கைக்கு வேறு வசதியை அமைத்துக் கொண்டு திருக்கோயில் பணிகளையும் பக்தி காரணமாக மேற்கொண்ட பணியாளர்களுக்குக் கோயில் வருவாயிலிருந்து சிறு மதிப்பூதியம் மட்டுமே வழங்கப்பெற்றது. நாயன்மார் வரலாறுகள் இந்நிலையை இனிதே விளக்குவன. எஞ்சிய கோயில் வருவாய் திருப்பணி, நந்தவனம், பசுமடம் முதலியவற்றிற்கும், தூயதிருநீறு தயாரித்து வழங்கவும், பிற நல்லறங்களுக்கும் பயன் கொள்ளப் பெற்றன.

தஞ்சைக் கோயில்கள் :

திருக்கோயில் நிலங்கள் அவ்வப்பகுதியில் வாழ்ந்து வரும் கோயில் சார்ந்த குடிமக்களிடமே குத்தகைக்குவிடப்பட்டிருந்தன. அவர்களும் பயபக்தியுடன் கோயில்களுக்கு உரிய குத்தகையை

வழங்கியதோடு. தாங்களும் நல்வாழ்வுபெற்றுச் சிறந்தோங்கியிருந்தனர். இன்று, தஞ்சை மாவட்டம் போன்ற நில வருவாயை மட்டுமே நம்பி நடக்கும் கோயில்களின் நிலை என்ன? கோயில் நிலங்கள் உரிய குத்தகைதாரரை விட்டு, பல உள்குத்தகைதாரர்களிடம் சிதறுண்டு சென்று சேர்ந்துள்ளன. எந்த நிலம் யாரிடம் உள்ளது என்பதைக் கோயிலாரும் அறிய முடியாது, அரசுக்கும் தெரிய முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. நாட்டு விடுதலைக்குப் பின்வந்த அரசுகளின், நடுநிலைமை அற்ற போக்கால் கோயில்களுக்குரிய நிலவருவாய்கள் படிப்படியாகக் குறைந்தன. தற்போது எல்லாம் இருந்தும் இல்லாத நிலையில், கோயில்கள் நித்திய பூசைக்கே சிரமப்படுகின்றன. இவற்றைப் பராமரிக்க என்று அமைக்கப்பெற்ற அறநிலையத்துறை, நிர்வாக அதிகாரி ஊதியம், தணிக்கைக் கட்டணம், சகாயக் கட்டணம் எனக் கோயில்களின் சிறு வருவாயையும், நித்திய பூசைபற்றிய எண்ணம் இல்லாது எடுத்துக்கொண்டு விடுகின்றது. ஆலய பூஜைகளும் ஆலய ஊழியர்களும் சிரமப்படும் நிலை உருவாகி விட்டிருக்கிறது.

பிரச்சனையின் மூலம் :

இந்நிலையில் ஆலயப்பணியாளர்கள், ஆலைத் தொழிலாளர்களைப் போல் தங்களைப் பதிவு செய்துகொண்டு ஏனைய அரசு ஊழியர்களுக்கு உரிய எல்லா ஊதிய வசதிகளையும் தங்களுக்கும் வழங்கவேண்டும் என்று போராடி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். ஆலயங்கள் ஆலைகள் அன்று; அங்குப் பணியாற்றும் பணியாளர்களும் ஆலைத் தொழிலாளர்களாக மாட்டார்கள். கோயில்பணி அன்புப்பணி; இது தொண்டு எனப்பெயர் பெறும். இதனைச் செய்வோர் தொண்டர்கள், பணியாளர்கள் எனப் பெறுவர். கோயில்களின் நிலை தனித்தனியானது. அவற்றின் வருவாயும் ஒவ்வொரு கோயிலுக்கும் மாறுபட்டது. வருவாய் அளவும் குறைவு. அக்குறைந்த வருவாயையும் பெற வழிவகை உத்தரவாதமும் கிடையாது. நித்திய பூஜைக்கே திணறும் கோயில்களில், பணியாளர்களின் கோரிக்கையில் நியாயம் இருந்தாலும் எங்ஙனம் அவற்றை நிறைவேற்றுவது? கோயில் நிலங்களை உரிய நஷ்ட ஈடு கொடுத்துப் பெறாது, தன்னிச்சையாக எடுத்து இலவசமனைப் பட்டா வழங்குவது; கோயில்களின் குத்தகை உரிமையைப் படிப்படியாக 60 விழுக்காடு, 40 விழுக்காடு, 25 விழுக்காடு எனக் குறைத்தது; குறைந்த குத்தகையையும் அளிக்கத் தவறியவர்கள் மேல் நீதிமன்ற நடவடிக்கை எடுக்க இயலாதவாறு இயற்றப்பட்ட சட்ட வரைவுகள்; பல ஆண்டுக் குத்தகை பாக்கிகளைத் தன்னிச்சையாக, ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்தது போன்ற அரசின்

மல, தவறான அணுகுமுறைகளால் கோயில் வருவாய் குறைந்து போயின. 1988 ஆம் ஆண்டிலேயே தமிழகக் கோயில் நிலங்களுக்குரிய குத்தகை பாக்கி 40 கோடி என்று தினமணிப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அச்செய்தியும் இவ்விதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்போதைய ஆணையரும் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். இவற்றையெல்லாம் ஆலயப்பணியாளர்கள் முதலில் உணரக்கடமைப் பட்டவர்கள். இது ஒரு நிலை.

அரசின் தவறான ஊதியக் கொள்கை :

இரண்டாவது; கோயில் பணியாளர்கள் தங்களைத் தொழிலாளர்களாகப் பாவித்துக்கொண்டு போராடத் துணிந்தமைக்குச் சமூகநீதிகளைப் போற்றத்தவறிய அரசின் தவறுகளும் காரணங்கள் என்பதை அரசும், அதை வற்புறுத்திய அரசுப் பணியாளர்களும் சிந்திக்கவேண்டும். ஒரு உதாரணம் காணலாம். 1955இல், ஒரு திருக்கோயில் ஓதுவாமூர்த்திக்கு வழங்கப்பெற்ற நெல் மற்றும் ரொக்கச் சம்பள மதிப்பு ரூபாய் 65-00. அன்று ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு வழங்கப்பட்ட ஊதியம் ரூபாய் 63-00. 35 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசு, ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு வழங்கும் ஊதியம் ரூபாய் 1650-00. இன்று பெரிய திருக்கோயில்களில் கூட ஓதுவாமூர்த்திகளுக்கு ஊதியம் ரூபாய் 300-க்கு அதிகம் இல்லை. இரவருவாயுள்ள சிலகோயில்களில் 500 முதல் 700 வரை வழங்கப்படுகிறது. 35 ஆண்டுகளில் இருசாராரிடை ஊதிய வித்தியாசம் ஒன்றுக்கு ஐந்தாக உயர்ந்துவிட்டது. குறிப்பிட்ட ஒருசாராரின் ஊதியங்களை மட்டும் உயர்த்திக் கொண்டேபோகும் அரசின்போக்கு, சமூக சமநிலை இன்மையை உருவாக்கி, குறைந்த ஊதியக்காரர்களையும், கொடுக்கும் வசதி கோயிலுக்கு உண்டா என்பதையும் நினையாது போராடத் துணைசெய்துவிட்டது.

நம்பிக்கை அற்றோர் குறுக்கீடு :

மூன்றாவது; கடந்த 25 ஆண்டுகளில் கோயில் நிர்வாகங்களை நடத்தியவர்களின் பக்தி அற்ற போக்கும் ஒரு காரணமாகும். பக்தியற்றவர்கள், பக்தி நிலையங்களைப் பராமரிக்கத் தம் சார்பாளர்களை நியமிக்கப்பட்ட போது தொடங்கிய தவறுகள் இன்றுவரை எதிர் விளைவுகளையேதோற்றி வந்துள்ளன. ஆலயநிர்வாகத்திலும் ஆலயப்பணிகளிலும் அவர்களால் புகுத்தப்பட்ட பல நூறுபேர் ஆலயங்களையும் தொழிற்சாலைகளாகச் சித்திரித்து, அன்புப் பணிபுரிய வேண்டியவர்களை அமர்க்களப் பணியாளர்களாக மாற்றியுள்ளனர் என்றே தோன்றுகின்றது. பாரம்பரிய பக்தி மற்றும்

பண்பாட்டில் வந்தவர்கள் ஆலயபூஜைகளை நிறுத்திவிட்டு ஒரு போராட்டத்தை நிகழ்த்தத் துணிந்திருப்பார்கள் என எண்ண இயலவில்லை. எனவே, காலத்தின் கோலம் என்றே கருதிக் கண்ணீர் விட வேண்டியுள்ளது. பேரறிஞர் அண்ணாதுரையின் ஆட்சியில் கடைசிவரை கோயில் பணிகளில் குறுக்கிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பழைய நிகழ்ச்சி :

பிரச்சனையின் தன்மையை அனைவரும் புரிந்து கொள்ள ஒரு புள்ளி விபரத்தைக் கீழே தருகிறோம். தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது, தமிழக முதல்வரின் பிறந்த ஊராகிய திருக்குவளையில் உள்ள ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம். இக்கோயில் சிப்பந்திகள் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 1—11—88 முதல் ஒரு போராட்டத்தைத் தொடங்கப் போவதாக அறிவித்தனர். அப்போது நிர்வாகச்சார்பில் அவர்களுக்குத் தரப்பட்ட விளக்கமே இங்குச் சுருக்கமாகத் தரப்படுகிறது.

சிந்திக்கச் சில விபரங்கள் :

மேற்குறித்த ஆலயத்திற்கு நஞ்சை 1321 ஏக்கரும், புஞ்சை 297 ஏக்கரும் உண்டு இவை 296 சாகுபடிதாரர்களிடம் உள்ளன. (இன்று பல கைமாறிப் பலரிடம் உள்ளன.) நஞ்சையில் 75-25 வாரப்படி கோயிலுக்கு வரவேண்டியநெல் (டிமாண்ட்) ஏறத்தாழ 10 ஆயிரம் கலம். கலம் 60ரூபாய் என்றாலும், இவ்வகையில் ஆண்டு வருவாய் 6 லட்சம் ரூபாய் ஆகிறது. இதில் தணிக்கைக் கட்டணம் இலாகா சகாயத் தொகை என 15 விழுக்காடு அறநிலைய துறைக்குச் செலுத்தப் படவேண்டும். இவ்வகையில் 90 ஆயிரம் செலவாகும். சர்க்கார் கிஸ்தி இதர வரிகள் ஏறத்தாழ ஒருலட்சம் செலுத்தவேண்டும். மீதி (4, 10, 000) இதில் 40 விழுக்காடு சிப்பந்திகள் சம்பளத்திற்குச் செலவிடலாம் என்பது இலாகா விதி. அதாவது 1, 64000 ரூபாய் சம்பளச் செலவு செய்யலாம். எஞ்சிய தொகை 2, 50000 ரூபாய் பூஜை, உற்சவம், பராமரிப்புத் திருப்பணி, குடமுழுக்கு முதலியனவற்றிற்குச் செலவிடலாம். இவையாவும் முழு அளவில் நெல்வசூல் ஆனால் மட்டுமே சாத்தியம்.

திருக்குவளை (திருக்கோளிலி) ஆலய ஊழியர்கள் போராட்டம் தொடங்கியதாக அறிவித்த 1988 ஆம் ஆண்டில் (பசலி 1398.) கோயில் நெல் வசூல் 3 ஆயிரம் கலத்துக்கும் குறைவு. என்றும்

ஊழியர் சம்பளத்திற்காக ரூ 61,200- மட்டுமே செலவிட முடியும். திருக்கோயிலில் 42 சிப்பந்திகள் வேலைபார்க்க இடம் உண்டு. நிதி நிலை காரணமாக 18 சிப்பந்திகள் மட்டுமே பணிசெய்து வந்தனர். மேற்குறித்த தொகையில் சராசரியாக ஒவ்வொரு சிப்பந்திக்கும் ரூ 283/- மட்டுமே மாத ஊதியம் வழங்கலாம். முழு அளவு சிப்பந்திகள் நிரப்பப்பட்டால் ஊழியர் சம்பளம் ரூ 150 அளவுக்குக்கூட வராது.

ஆலயங்களின் அணுகுமுறை !

உண்மைநிலை இதுதான். வருவாய் இல்லாத நிலையில், வருவாய்க்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் கூடுதல் ஊதியத்தை நிர்வாகம் எப்படி வழங்க இயலும்? முழுவருவாயும் அரசின் நியாயமான நடவடிக்கைகளால் உத்தரவாதம் செய்யப்பட்டால் கூடுதல் ஊதியம் வழங்குவதில் தடைஏதும் இல்லை. எனவே, நோய் முதல் நாடாது ஊழியர்கள் போராடுவது பயன்தராது. கோயில் நிலங்களை அனுபவித்து வருபவர்களை 25 விதமுள்ள முழுக் குத்தகை அளக்குமாறு அரசும், சமூகமும் நெருக்குதலே பிரச்சனையைத் தீர்க்க உதவும். இவை கூட போதிய நிலமற்ற மற்ற கோயில்களில் வழங்க இயலாது. எனவே. தமிழ்நாடு அரசும், அரசுப் பணியாளர்களும், ஆலயப் பணியாளர்களும் சிந்தித்துச் செயற்படவேண்டும் எனஞானசம்பந்தம் கனிவுடன்வேண்டுகிறது.

அரசின் அணுகுமுறை :

மாண்புமிகு கலைஞர் மீண்டும் ஆட்சி ஏற்றபோது கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி. இதனை முதலிலேயே பலமுறை அறிவித்துள்ளார். இந்நிலையில் அரசுப் பணியாளர்கள், மத்திய அரசுப் பணியாளர்கட்கு இணையாக ஊதியம் கோரி புரட்சி செய்தனர். மூத்து வரும் பணியாளர்களின் நெருக்குதல் காரணமாக ஆண்டொன்றுக்கு 427 கோடிரூபாய் ஊதிய உயர்வு செய்தார். அதனால் மேலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அரசுமருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. கல்விநிலையங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லை, நீதிமன்றங்களில் போதிய நீதிபதிகள் இல்லை. இப்படிப் பல அரசியல் சுகாதாரக்குறைபாடுகள் ஏற்பட்டன. இவற்றைத் தவிர்ப்பதற்கு வழியென்ன என்று சிந்திக்கும் நிலையில்தான் சில குடிமக்கள் விஷசாராயம் குடித்து மாண்டனர். இந்நிலை அரசின் பொருளாதாரச் சுகாதாரத்தைச் சீர்செய்ய உபகரமாக வாய்த்தது. மலிவுவிலை மது உதயமாயிற்று. இது பொருளாதாரத்தைச் சீர்செய்ய உதவியதே தவிர மக்களை,

நாட்டை உயர்த்த உதவவில்லை. இந்நிலை அழிவுரீதிபொருளாதாரம் என்று சொல்லலாமே தவிர ஆக்கரீதிப் பொருளாதாரம் என்று சொல்ல இயலாது. ஆக்கரீதிப்பொருளாதாரம் ஏற்பட வேண்டுமானால் அரசும், அரசுப்பணியாளர்களும் அரைகுறையான சாதாரண மக்களைக் காப்பாற்றும் பொறுப்பில் இருக்கிறோம் என்பதை உண்மையாகவே உணர்ந்து செயல்பட்டால் தான் ஆக்கரீதிப்பொருளாதாரம் சாத்தியமாகும். 'அறிவுடையோன் ஆறு அரசுபசெல்லும் என்பது' ஆன்றோர் வாக்கு. ஆளப்படும் மக்களைக் காட்டிலும் ஆளும்அரசும், அரசுப் பணியாளர்களும் அறிவுடையோர் என்பதே ஆன்றோர் கருத்து. அதற்கேற்ப நடந்து நாட்டையும், நாட்டு மக்களையும் நல்வாழ்வு வாழ வழிவகுப்பார்களாக.

அளவு கோல்கள் மாறுபடும் :

அறச்சொத்துக்களில் உரிய வருவாய் கிடைக்க ஆவனசெய்யாது அரசு இருப்பது பெருமைக்குரியதன்று. கோயில் நிலங்களை அனுபவித்து வருவோர், உரியகுத்தகை அளக்கத்தவறுவது நன்றிகொன்ற செயலாகும். ஆலயப்பணியாளர்கள் காலங்காலமாக இயங்கிவரும் ஆலய வழிபாடுகளை நிறுத்தச்செய்வது மக்களின் கோபத்தைத் தூண்டுவதாகவே அமையும். பொருள்களின் தன்மைக் கேற்ப அளவுகோல்கள் மாறுபடும். ஒரே அளவு கோலால் அனைத்தையும் அளத்தல் அறிவுடைமை ஆகாது. ஆலைத் தொழிலாளர்கள்போல் ஆலய ஊழியர்கள் செயல்பட்டால் பிரச்சனைக்குத் தீர்வு காண வழி இல்லை. சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தித்துச் செயல்பட இறையருள் துணைநிற்கப் பிரார்த்திப்போமாக.

கோயில் பணிகள் குறை விலாதுயர்க!
கோயில் பணியாளர் குறை விலாதுயர்க!
அரசு அறநெறி பிழையா தாளுக!
அரசுப் பணியாளர் ஆன்றோர்வழிநிற்க!

கோவில் நிலங்களுக்குக் குத்தகைப் பாக்கி ரூ. 40 கோடி

தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர்கள் பாதுகாப்புச்சட்ட வரம்பிலிருந்து கோவில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கச் சட்டம் இயற்றப்படும் என்று முந்தைய அ. தி. மு. க. அரசு கடந்த நாலைந்து ஆண்டுகளாகக் கூறி வந்தது.

இத்தகைய சட்டத்தின் மூலம் கோவில்களுக்குச் சேர வேண்டிய 25 சத மகசூலைப் பெற இயலுமெனக் கருதப்பட்டது. ஆனால், இச்சட்டம் இதுவரை நிறைவேற்றப் படாததால், குத்தகைப் பாக்கியை வசூலிக்க இயலாமல் பல கோவில் நிர்வாகங்கள் திணறும் நிலையில் உள்ளன.

மாநிலம் முழுவதிலும் ஹிந்து கோவில்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமாக 5. 25 லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. குத்தகை தாரர்களிடம் விடப்பட்டுள்ள நிலங்களிலிருந்து குத்தகைப் பாக்கி சுமார் 40 கோடி வரை வசூலாகாமல் உள்ளது.

பல்வேறு சட்டங்களினால் குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதால், குத்தகைப் பாக்கி செலுத்தாதவரை கோவில் நிலங்களிலிருந்து வெளியேற்ற இயலாத நிலை உள்ளது. இதனால் கோவில்கள் வருமானம் இல்லாமல் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளன. சில கோவில்களில் அன்றாட வழிபாடுகள் நடத்துவதற்கும், ஆலய ஊழியர்களுக்கு ஊதியம் அளிப்பதற்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் பெரும்பாலானகோவில்கள், அவற்றின் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயையே நம்பியுள்ளன.

அறங்காவலர் குழுக்கள் தேவை :

தமிழகத்தில் தற்போது குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் ஆலோசகர்கள், தமிழகத்தில் உள்ள முக்கிய கோவில்களுக்கு அறங்காவலர் குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பக்தர்கள் கருதுகின்றனர். இக்கோவில்கள் தற்போது தக்கார்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

— நன்றி. வெளியூர், தினமணி, 9—2—88.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருக்கடவூரில் நடைபெற்ற ஐந்தாம் திருமுறை
முற்றோதலாகிய திருமுறைவேள்வியின் நிறைவில்
வழங்கியருளிய

ஆசியுரை

27—5—1990

" மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையும் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே "

பொருந்திய செயல் :

இன்று திருவாதிரைத் திருநாள். மாதந்தோறும் இப்புனித நாளில் நிகழ்த்தி வருகின்ற திருமுறைவேள்வி, இன்று, இத்திருக்கடவூரில் இறையருளால் இனிதே நிறைவேறியுள்ளது. ஐந்தாம் திருமுறை முற்றோதல் இத்தலத்தில் நிகழ்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, இப்பதியில் திருநாவுக்கரசர் அருளிய குறுந்தொகைப் பதிகம், ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ளது. அப்பதிகம் தான், மேற்கண்டுள்ள "மலைக் கொளானை" என்று தொடங்கும் பதிகம் ஆகும். இரண்டு, சிவனடியார்பால் செல்லாதீர் என்று இயமன் தூதுவருக்கு ஆணையிட்டருளிய பதிகமாகிய 'காலபாசத் திருக்குறுந்தொகை' இவ்வைந்தாம் திருமுறையில் உள்ளது. அருள்மிகு காலசம்ஹாரமூர்த்தி எழுந்தருளியுள்ள இப்பதியில் இத்திருமுறை முற்றோதலை நிகழ்த்துவது சாலப் பொருத்தம் ஆகும் அல்லவா?

வில்வ வனம் :

இத்தலம் குறித்த சிலசிந்தனைகளை முதற்கண் மேற்கொள்வோம். இத்தலம், முற்காலத்தில் வில்வ வனம் என்று அழைக்கப் பெற்றுள்ளது. பிரமன் ஞானோபதேசம் பெற விரும்பி இறைவனை வழிபட்டபோது, இறைவன் வில்வ விதை ஒன்றைக் கையில் கொடுத்து, இவ்விதை எந்த இடத்தில் ஒரு முகூர்த்தத்தில் முளைக்கிறதோ அந்த இடத்தில் நம்மை வழிபடுக என அருளினார் என்றும் இத்தலத்தில் பிரமன் அதனை இட்டபோது அது அக்குறித்த காலத்தில் முளைத்தது என்றும் பின்னர் பிரமன் இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றான் என்றும் கூறுவர். இதனால் இத்தலம் வில்வவனம் என்னும் பெயர் பெற்றது.

திருக்கடவூர் வீரட்டம் :

பின்னர், இத்தலம் திருக்கடவூர் என வழங்கப் பெற்றது. தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து தாங்கள் பெற்ற அமுதகடத்தை இங்குக் கொண்டுவந்து வைத்து நீராடச் சென்ற போது அவ்வமிர்த குடமே சிவலிங்கமானதால் சுவாமி அமிர்தகடேசுவரர் எனப்பெற்றார். இத்தலம் கடவூர் எனப்பெயர் பெற்றது.

இத்தலம் மார்க்கண்டேயருக்காகக் காலனைத் தம் திருவடியால் இறைவன் உதைத்தருளியது ஆதலின் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது. இத்தலத்துப் பெயர் கடவூர் என்பதும் இங்குஉள்ள திருக்கோயிலுக்குப் பெயர் வீரட்டானம் என்பதும் ஆகும்.

கடவூர் மயானம் :

இங்கு மற்றுமொரு சிறப்பும் உண்டு திருக்கடவூர் மயானம் என்பது அது. இதற்குப் புராண வரலாறு ஒன்று உள்ளது. நான்முகனுக்கு 2000 சதுர்யுகம் கொண்டது ஒருநாள் என்றும் இங்ஙனம் உள்ள 385 நாட்கள் கொண்டது ஒருவருடம் என்றும் இவ்வாறு நூறாண்டுகள் ஆனவுடன் பிரமன் தன் சரீரத்தை யோகாக்கினியில் லயப்படுத்துவார் என்றும் அங்ஙனம் லயப் படுத்தி ஐக்கியமான இடமே மயானம் என்று அழைக்கப் பெறுகிறது என்றும் தலபுராணம் கூறுகிறது. இங்ஙனம் இங்கு ஐக்கியமான பிரமன் மூன்றுவது பிரம்மா என்றும் அது கூறுகிறது.

எனவே இக்கருத்துக்களை முழுமையாகச் சிந்தித்தால் இத்தலம் வில்வவனம் என்று முன்பு இருந்தது என்பதும் பின்னர்க் கடவூர்

என்றனது என்பதும் திருக்கோயில் அமைந்துள்ள பகுதி வீரட்டானம் என்றழைக்கப் பெறுகிறது என்பதும் பரமன் அக்கினியில் ஐக்கியமான இடம் மயானம் என்று ஆயிற்று என்பதும் தெளிவாகின்றன.

குறுந்தொகை யாப்பமைவு :

அப்பர் அருளிய ஐந்தாம் திருமுறைப் பதிகங்கள் நூறும் திருக்குறுந்தொகை எனப் போற்றப்பெறுவது. 'குறுந்தொகை' என்பது யாப்பமைதியால் பெற்றபெயர். குறைந்த எழுத்துக்களைப் பெற்று இப்பாவகை அமைதலின் இப்பெயர் பெற்றது. இது நாற்சீர் நாலடியாய் வருவது. சங்க இலக்கியங்களுள் எட்டுத் தொகையுள் ஒன்று; 'குறுந்தொகை' எனப்பெயர் பெற்று விளங்குகிறது. அந்நூலில் நாலடிக்கு மேலும் பாக்கள் இருப்பினும் மற்ற சங்க நூல்களை நோக்கக் குறைந்த அடிகளைக் கொண்ட பாடல்களை உடையது ஆதலின் அப்பெயர் பெற்றது. குறுந்தொகைப் பாடல்களின் முதற்சீர் தேமா, அல்லது புளிமா என்று அமையும். தேமா என்று தொடங்கும் அடி ஒற்று நீக்கிப் பதினொரு எழுத்துக்கள் கொண்டிருக்கும். புளிமா என்று தொடங்கும் அடி ஒற்று நீக்கிப் பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்டிருக்கும். எனவே குறுகிய எண்ணிக்கையுள்ள எழுத்துக்கள், குறைந்த அடிகள் கொண்ட பாடல்கள் அமைந்த நூல் 'குறுந்தொகை' என்று அழைக்கப் பெறுவது.

திருநாவுக்கரசர் இவ்யாப்பமைதியை ஏன் தேர்ந்தெடுத்தார் என்று சிந்திக்கும் பொழுது, ஒருதலத்திலிருந்து பிறிதொரு தலத்திற்கு நடந்து செல்லும் பொழுது, உழவாரத் திருத்தொண்டு செய்யும் பொழுதும் இவ்யாப்பமைவு எளிமையாகப்பாட ஏற்றது என்று கருதி அமைத்துள்ளார் எனலாம்.

தில்லைப் பதிகம் :

இத்திருமுறையின் கண் உள்ள பாடல்கள் முழுமையையும் சிந்திப்பது இங்கு இயலாது எனினும் ஒன்றிரண்டு பதிகங்களை மட்டும் சிந்திக்க முற்படுவோம். இத்திருமுறையின் முதல் பதிகம் "அன்னம் பாலிக்கும் .. " என்று தொடங்கும் கோயில் (தெபபரம்) பதிகம் ஆகும்.

" அன்னம் பாலிக்குப் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என் அன்பு ஆலிக்கும் ஆறுகொண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே "

இப்பாடலில் அன்னம் என்று குறிப்பது, சோற்றையும் வீடுபேற்றையும் ஆகும். வீடுபேற்றைத் தரவல்லவன் எழுந்தருளியுள்ள தலம் தில்லை என்று முதற்கண்கூறி, அடுத்துப் படிப்படியாகக் கீழ்இறங்கி வருகின்றார். அது பொன்னார்ந்த உலகமாகிய வானுலகையும் அளிக்கும்; மேலும் இப்பூவுலகில் என்னுடைய அன்பு விரிந்து பரவுதற்குரிய ஈர்ப்பு நிலை கொண்ட இச்சந்நிதானத்தில் வழிபடுதற்கு ஏதுவாக இப்பிறவியை அளிக்குமோ? இல்லை வீடுபேற்றைத் தந்தருளுமோ என்று கேள்வி வடிவில் கேட்டுள்ளார். அப்பர் மனிதப் பிறவியை மேலும் வேண்டினர் என்று இப்பாடலுக்கு உரை காணுவது அத்துணைப் பொருந்துமாறில்லை.

அறிவுறுத்தல் பாடல்கள் :

ஐந்தாம் திருமுறைப் பதிகங்கள் சில, நெஞ்சைப் பார்த்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. மனித உயிர்களை அழைத்து அறவுரை பகர்வனவாகவும் சில அமைந்துள்ளன.

“ நிலைமை சொல்லு நெஞ்சே தவம் என் செய்தாய் ”

என்று தொடங்கும் மயிலாடுதுறைப் பாடலும்,

“ நேசமாகி நின்மட நெஞ்சமே ”

என்று தொடங்கும் திருஆனைக்காப் பாடலும் சான்றாகின்றன.

“ துறவி நெஞ்சினராகிய தொண்டர்காள் ”

என்று தொடங்கும் திருக்குடமூக்குப் பாடலும்,

“ மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன் ”

என்று தொடங்கும் தனித்திருக்குறுந்தொகைப் பாடலும் மனிதர்களை அழைத்து அறங்கூறியதற்குச் சான்றுகளாய் உள்ளன.

அதிசூக்குமப் பஞ்சாட்சரம் :

அதிசூக்கும பஞ்சாட்சரம் என்று சுட்டப் பெறும். ‘ சிவாய ’ என்னும் மந்திரம் இவ்வைந்தாம் திருமுறையில் திருப்பாலைத் துறைப் பதிகத்தில் உள்ளது.

“ விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது சிவாய என்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
பண்ணினார் அவர் பாலைத் துறையரே ”

என்பது அப்பாடல்.

அகச்சான்று :

அப்பர் சுவாமிகள் தம்மைக் கல்லில் கட்டிக் கடலில் போட்டபொழுது ஐந்தெழுத்தோதி உய்ந்ததைத் திருநீலக்குடிப்பதிகத்தில் தெளிவாகக் குறித்தருளுகின்றார்.

" கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நாக்க என்வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே "

என்னும் பாடல் அகச்சான்றாகும்.

தமக்கையார் குறிப்பு :

திருநாவுக்கரசர் தமக்குத் தமக்கையாக வந்தமைந்த திலகவதியாரின் துணையினால் தான் தாம் அருள்பெற்றுய்ந்தோம் என்பதை இரண்டு இடங்களில் சுட்டியருளுகிறார். "கூற்றாயினவாறு விலக்ககிலீர்........." என்று தொடங்கும் முதல் பதிகத்தில், "சாத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்... .. ..." என்னும் பாடலிலும் "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய் ' என்று நாலாம் திருமுறையிலுள்ள திருப்பாதிரிப் புலியூர்ப் பதிகப் பாடலிலும் குறித்திருக்கிறார். ஐந்தாம் திருமுறையிலும் தெளிவாக ஒருபாடலில் திலகவதியின் துணை குறித்துக் கூறுகிறார்.

" எம்மை யாரிலை யானும் உளேன் அலேன்
எம்மை யாரும் இது செய வல்லரே
அம்மை யார் எனக்கு என்றென் றரற்றினேற்கு
அம்மை யாரைத் தந்தார் ஆரூர் ஐயரே "

என்னும் பாடல் திலகவதி அம்மையார் தமக்குத் துணையாக வந்தமைந்ததைக் குறிக்கிறது.

காலபாசத் திருக்குறுந்தொகை :

இத்திருமுறையின் நிறைவில் தனித்திருக்குறுந்தொகை காலபாசத்திருக்குறுந்தொகை, மாசிற்பனே என்னும் திருக்குறுந்தொகை, இலிங்க புராணத் திருக்குறுந்தொகை, சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை, உள்ளத் திருக்குறுந்தொகை, ஆதிபுராணத் திருக்குறுந்தொகை என்னும் பதிகங்கள் மிகச் சிறப்பான பாடல்களைக் கொண்டு இலங்குகின்றன. இவற்றில் இத்தலத்துக்கு ஏற்பக் காலபாசத்திருக்குறுந்தொகையில் உள்ள ஒருசிலபாடல்களை மட்டும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம். இப்பகுதியில் இயமன் தூதருக்கு அறிவுறுத்தும் பாங்கினை அமைத்துப்

பாடல்களும் அமைந்துள்ளன. ஈசன் அடியாரைக் கண்டால் அவர்களை வணங்கிச் செல்லுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். காலன் அப்படி நினையாமல் மார்க்கண்டேயரின் மீது பாசக்கயிறு வீசியமையால் இறைவனின் திருவடியால் உதைபட்டுப் பின் தமது ஆதீனம் அமைந்துள்ள தருமபுரத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பாவம் தீர்ந்தான் என்பது வரலாறு.

" படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமது ஈசனடியரை
விடை கொள் ஊர்தியினான் அடியார் குழாம்
புடை புகாது நீர் போற்றியே போமினே "

என்னும் பாடலில் ஈசனடியாரைக் கண்டால் புடைபுகாது போற்றிச் செல்லுதல் தூதவர்களின் கடமை என்று அறிவுறுத்தப் பெற்றுள்ளது. நக்கீரதேவர் தமது "கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி" என்னும் நூலிலும் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

" தொழுது நமனும் தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் சீர்க்காளத்தி மன்னன் — பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்துணையும் செய்த்தாக என்று "

என்பது அப்பாடல்.

சிவன் என்று கூறுவார் பக்கம் போகாதீர், நிறைய நீறணிவார் எதிர் செல்லாதீர், இறைவனுக்குத் தூப, தீப, சந்தனம், மலர்மாலைத் தொண்டு செய்வார் எதிர் செல்லாதே, அஞ்செழுத்தில் ஓரெழுத்தைச் சொன்னாலும் அவரிடம் செல்லாதே என்று காலதூதுவர்க்கு அறம் கூறி அலைச் செய்யும் பாடல்களும் இப் பதிகத்துள்ளன.

இங்ஙனம் திருமுறையிலுள்ள அரிய பெரிய கருத்துக்களை நுணுகி உண்மை காணும் உணர்வில் பயின்று ஓதி உணர்தல் சமய அன்பர்களின் தலையாய கடமையாகும்.

வாழ்த்து :

இன்று இத்திருமுறைவெளியீட்டில் கலந்துகொண்டுதிருமுறைப் பாடல்களைப் பக்தியுணர்வுடன் ஓதியவர்களும், வந்து கேட்ட அன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" வந்துகேளமின் பயலதீர் மனிதர்காள்
வெந்த நீறறன் விசயமங்கைப் பிரான்
சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனப்
பந்து வாசகி உய்யக்கொளும் நாண்மினே "

— திருக்குறுந்தொகை.

தொகையடியார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 1—4—90, 6—5—90 ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

ஏப்ரல் முதல் நாள்! முதல் ஞாயிறு இணைந்தது! அன்று திருவாரூர் எல்லைத் தெய்வமாகிய ரேணுகாதேவி ஆலய மகா கும்பாபிஷேகம்! குருமணிகள் எழுந்தருளி உடனிருந்து முன்னின்று நிகழ்த்தி ஆசியுரையருளினார்கள். அமைச்சர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஆதலால் மாலை 7—00 மணி அளவில் அருளுபதேசம் நடைபெற்றது.

ஏப்ரல் முதல் நாளிலும் தருமைஆதீன முதற்குரவர் குருபூசைவிழாத் தொடக்கநாளிலும் (6—5—90) உபதேசித்த பெரியபுராண அருளுரைகள் தொகையடியார்களைப் பற்றியன. இவை இரண்டும் தொகுத்தெழுதப்பெற்றுள்ளது.

குருமணிகள், அன்பர்கட்குத் திருநீறு வழங்கி ஆசியருளினார்கள். பாராயணம் வழக்கம்போல் நடைபெற்றது. குருதோத்திரம் செய்து கொண்டு உபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச்சிறப்புத் திருநாள்கள் பற்றிய குறிப்பு அருளித் தொகையடியார்கள் பற்றிய சிந்தனை வழங்கினார்கள்.

தொகையடியார் ஒன்பதின்மர் தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்னும் இவர்கள். தனியடியார்கள் அறுபத்துமூவர். சுந்தரர், தனியடியார்கள் அறுபதின்மரைக் குறித்தருளினார். மேலும் பலகருத்து கூறும்போது,

" என்னவனும் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர் கோன் "

என்று திருத்தொண்டத் தொகையின் நிறைவில் சடையனர், இசைஞானியாரின் புதல்வர் எனத் தம்மைக் குறித்துத் தாம் சொன்ன அடிமைகேட்டு உவப்பவர்கள் ஆரூரில் அம்மானுக்கு அன்பராவார் என்றருளினர். பின்னர்வந்த நம்பியாண்டார் நம்பிகள் நாயன்மார் அறுபதின்மரை நமக்கு அறிவித்துவழிகாட்டி அருளிய சுந்தரர் அவர்தம் தந்தையாராகிய சடையனர், சுந்தரரின் தாயார் இசைஞானியார் என்னும் இம்மூவரையும் சேர்த்துத் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறித்தார். இதுவே அறுபத்துமூவர் தனியடியார்- என்னும் வழக்கிற்கு அடிகோலிற்று. இங்ஙனம் குறித்தருளிய குருமணிகள் தொகையடியார் புராணக் கருத்துக்களைத் தெளிவாக உபதேசித்தார்கள்.

பத்தராய்ப் பணிவார் :

இறைவனையே அடிபணிந்து, உரைசெய்த வாய்தடுமாறி, உரோம புளகம்கொண்டு அவயவம் நடுங்கி, கண்ணருவி சொரிந்து பத்திமை நலம் சான்றவர் பத்தராய்ப் பணிவார் எனப்படுவர் - என நம்பியாண்டார் நம்பிகள் குறித்தருளினர். சேக்கிழார் எட்டுத் திருப்பாடல்களில் பத்தராய்ப் பணிவாராகிய தொகையடியார் சிறப்பை விதந்து ஓதியருளினர்.

" ஈசனுக்கே அன்பானர் யாவரையும் தாம் கண்டால்
கூசிமிக குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்று
ஆசையினல் ஆவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார் "

என்று முதல் திருப்பாட்டில் பத்தராய்ப் பணிவார் சிறப்பினைச் சேக்கிழார் ஓதினர். ஈசனுக்கே அன்பானர் - என்ற தொடர் பொது நீக்கித் தனை நினைதலைச் சுட்டுகிறது - எனவும் அடியாரைக் கண்டால் கூசுதல், மனமகிழ்தல் விருப்பத்துடன் அருகணைதல் முதலிய பண்புடையவர் இவர் என்றும் விளக்கம் அருளினர்கள். பசுவினைத்தேடிக் கன்று செல்லுதல்போல அடியாரைத்தேடிச் செல்வர் எனப் பத்தராய்ப் பணிவார் பண்பைச் சேக்கிழார் சுட்டி அருளினர். மணிவாசகர் அருளிய, 'உற்றாரை யான்வேண்டேன்' என்னும் திருவாசகத்தோடு இப்பகுதியை ஒப்பிட்டருளினர்கள். கற்றாவின் மனம்போல எனத் தாய்ப்பசு கன்றை நினைதலை உவமை ஆக்கினர் மணிவாசகர். ஆவின்பின் கன்று அணைந்தாற்போல எனக்கன்று தாய்ப்பசுவைத்தேடி அணைதலை உவமை ஆக்கினர் சேக்கிழார் - என வேறுபாடு சுட்டி விளக்கியருளியமை சிறப்பாக அமைந்தது.

இங்ஙனம் சிவனிடத்தும் அடியாரிடத்தும் அன்புடையோர்: தாம் செய்யும் வழிபாடு முதலியவையாவும் சிவன் கழற்கே என்னும் கருத்துடையார் - சிவமே அனைத்தும் என நினைந்து ஒழுகுபவர்; பிறவிக்குழியில் விழாதவர் என விளக்கி அவர்கள்,

" நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டாம் குணமிக்கார் "

எனச்சேக்கிழார் சிறப்பிக்கிறார். குருமணிகள் தருமை ஆதீனக் குருமுதல்வர், ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

" கிடந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன் அந்த அந்தகனும்
தொடர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்
பின்னைச்சொல் இல்லையே '

என ஆசாரிய பக்தி பற்றி அருளிச் செய்தவற்றை ஒப்பிட்டுச் சதாகாலமும் ஈசுவரத் தியானமாக இருப்போரே பத்தராய்ப் பணிவார் என விவரித்தருளினார்கள்.

பரமனையே பாடுவார் :

உள்ளம் உருகித் தமிழ்மொழியிலாயினும், வடமொழியிலாயினும் பிற தேசமொழிகளிலாயினும் சிவபெருமானையே பொருளாகக் கொண்டு இசைப்பாட்டுக்களை ஒன்றிய உணர்வுடன் பாடும் மெய்யடியார்கள் பரமனையே பாடுவார் ஆவர் - இங்ஙனம் விளக்கிய குருமணிகள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் முக்கரணச்செயல் ஆதலை இடையே தெளிவுபடுத்தி அருளினார்கள்.

இயல்	—	எண்ணம்	—	மனத்தின் செய்கை
இசை	—	சொல்	—	வாக்கின் செய்கை
நாடகம்	—	செயல்	—	காயத்தின் செய்கை

இங்ஙனம் மூவகை நிலையிலும் சிவனையே பொருளாகக் கொள்ள வேண்டும் என உணர்த்தி உலகியலில் பொருள் (செல்வம்) ஒன்றே குறிக்கோளாகக் கொள்ளாமல் மெய்ப்பொருளாம் நிலையான பொருளைக் குறிக்கோளாகக் கொண்டு பாடுதல் வேண்டும் என உபதேசித்து நெறிகாட்டியருளினார்கள்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் :

பிரம்மா, திருமால், ருத்ரன், மகேசன், சதாசிவன் என்னும் காரணக்கடவுளர் ஐவர்க்கும் உரிய இருதயம், கண்டம், உள் நாக்கு, புருவமத்தி, பிரமரந்திரம் என்னும் ஐந்து தானங்களைக் கடந்து நாதாந்தத்தில் பரமசிவம் ஞானஒளியாய்த் திகழ்கின்றார். நாதாந்த தாரணையால் சிவத்தினை அடைந்த சித்தம் உடையவரே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் எனப்பெறுவர். இவர்கள் சிவயோக நெறி உணர்ந்தோர் ஆவர். சீவன்முத்தர்கள் எனவும் கூறப் பெறுவர்.

திருவாரூர்ப் பிறந்தார் :

பெருஞ்சிறப்பினை உடையது திருவாரூர். இத்தலத்தில் பிறந்தோர் அனைவரும் சிவகணங்களேஆவர். ஆதலின் திருவாரூர்ப் பிறந்தாரை வழிபட்டுய்ய வேண்டும். திருவாரூர்ப் பிறந்தார் சிறப்பைச் சிவபெருமான் நமிநந்தி அடிகட்கு உணர்த்தியருளினர். நமிநந்தியார்க்குத் திருவாரூர்ப் பிறந்தார் அனைவரும் சிவகணங்களாகவே காட்சி தந்தனர் என்ற குறிப்பை வரலாற்றின் மூலம் விளக்கினர்கள்.

முப்போதும் திருமேனி தீண்டுவார் :

இவர்கள் சிவ ஆசாரியர்கள்; ஆதிசைவர்; இறைவனைப் பூசிப்போர். சிவாகம விதி முறைப்படி ஆர்வத்துடன் அன்பு பெருகக் காலை, நண்பகல், மாலை என்னும் முப்போதிலும் பூசிக்கும் ஆதி சைவர்கள் ஆவர்.

காலை, நண்பகல், மாலை என்னும் முப்போதிலும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்றாகப் பகுக்கப்பட்ட காலங்களிலும்-எக்காலத்திலும் ஆகமப்படித் தொண்டு செய்து அருச்சனை வழிபாடு ஆற்றுதல் சிவவேதியர்களுக்கே உரியதாம். அவர்களின் புகழ் மிகவும் பெருமை சான்றதாகும்.

முழுநீறு பூசியமுனிவர்:

திருநீறு சைவசமய சாதனங்களுள் ஒன்று. திருநீறு விபூதி எனப்படும். திருநீற்றினைத்திரிபுண்டரமாகவேனும் (மூன்று கீற்றுக்களாகவாவது) பிறைவடிவமாகவேனும், தீபவடிவமாகவேனும்,

வட்டவடிவமாகவேனும் அன்போடு முறைப்படி அணிதல் வேண்டும். சிவனை நினைத்துத் திருமேனி முழுதும் நீறு பூசும் மும்மலம் அறுத்தமுனிவர்கள் முதலிய சமய ஒழுக்கம் சிறந்தோர்கள் முழுநீறு பூசிய முனிவர் எனப்பெறுவர்.

அப்பாலும் அடிச்சார்ந்தார் :

சுந்தரர் தம் காலத்துக்கு முன்னும் பின்னும் தோன்றிய அடியார்களைப் பொதுவகையில் சிறப்பித்துக் குறிப்பிட்டதொடர் இது அப்பாலும் அடிச்சார்ந்தார் என்போர் யாவர்? என்னும் வினாவிற்குச் சேக்கிழார் தரும் விடை வருமாறு :-

" மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறையோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியார் அடிச்சார்ந்தார்கள்
செப்பிய அப் பலுமடிச் சார்ந்தார் தாமே "

காலத்தாலும் தேயத்தாலும் சுந்தரர்க்கு முன்னும் பின்னும் வாழ்ந்த சிவனடியே சார்ந்தோர் அப்பாலும் அடிச்சார்ந்தார் எனப்பெறுவர்.

தொகையடியார்கள் :

நாயன்மார் அறுபத்து மூவர்தான் என்று வரையறுத்து நிறுத்தாமல் மேலும் இத்திறமுடையார் வரக்கூடும் என்று எண்ணி, அவர்களை எல்லாம் ஒன்பது பகுதியுள் அடக்கி அறிவித்துள்ளார் சுந்தரர். ஒன்பதுவகையுள் ஒருவகையில் அவ்வத்தகுதியுடையாரை வைத்துப் போற்றுதல் நம் கடமை என்பதையும் உணர்த்தி யருளினர். இதுவே தொகையடியார் அமைப்பிற்குக் காரணமாயிற்று நாயன்மார் திறமுடையார் ஒருவர் உளராயின், இவ்வொன்பது திறத்துள் ஒன்றில் வைத்து நாம் வழிபடலாம், அஃதன்றி 64-வது நாயனர் என்று கொள்ளத் தேவையில்லை, அவ்வாறு கொள்ள சுந்தரர் இடம் வைக்கவில்லை. இன்ன இன்ன தகுதியுடையார் பத்தராய்ப்பணிவார் முதலியதொகையடியாருள்

ஒருவராகத்பாலர் எனக்கொண்டு வழிபட வைத்துள்ளார். இத் திறம் வேறு எம்மொழியிலும், எச்சமயத்தும் காண இயலாத தொன்று என விளக்கியருளினர்கள்.

தொகையடியார் கோயில் :

மேலும் தனியடியார் ஒவ்வொருவக்கும் வடிவம் கொடுக்கப் பட்டுள்ளது ஆனால் தொகையடியார் ஒருவர் அல்லவே அவர் களுக்கு எப்படி வடிவம் கொடுப்பது என்று கருதிய அருளாளர்கள். அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத்திருவுருவையே ஒவ்வொரு தொகையடியாருக்கும் ஒவ்வொரு சிவலிங்கம் அமைத்து வழி பட்டுப் போற்றினர். இங்ஙனம் ஒன்பது தொகையடியார்கட்கும் ஒன்பது சிவலிங்கம் அமைத்து வழிப்பட்ட கோயில் சிதம்பரம் திருக் கோயிலில் சிவகங்கைக் கரையில் வடமேற்றிசையில் உள்ளது. இதில் ஒன்பது சிவலிங்கங்கள் உள்ளன. இதனை நவக்கிரககோயில் என்று இப்போது வழங்குகின்றனர். ஆனால் இது தொகை அடியார் ஒன்பதின்மர் கோயில் என்பதைச் சிதம்பரம் திருக் கோயில் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் அறுபத்துமூவர் வரிசையில் இவ்வொன்பதின் மருக்கும் தனித்தனி உருவம் இருக்கின்றது. என்பதையும் குறிப்பிட்டு, குருமணிகள் விளக்கியருளினர்கள்.

இங்ஙனம் தொகையடியாரில் எழுவர் பற்றிய சிறப்புகளைக் குறித்தருளி உபதேசித்தார்கள். தில்லைவாழ் அந்தணர் புராணமும், பொய்யடிமைஇல்லாதபுலவர் புராணமும் முன்னரே உபதேசிக்கப் பெற்றன.

1—4—90 மாலை நடைபெற்ற அருளுபதேசத்தில் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் வரையும் 6—5—90 பகல் நடைபெற்ற அருளுபதேசத்தில் பிறபகுதிகளும் உபதேசிக்கப் பெற்றன.

இனிய அருளுபதேசம் நிறைந்தது. கனிச்சாறும் உணவும் வழங்கப்பட்டன. பருகியும் உண்டும் மகிழ்ந்தோம். சிந்தனைத் தெளிவோடு இல்லம் ஏகினோம்.

தொகையடியார் திறமருளித் தொண்டர்சீர் விரித்தருளும் வகைநினைந்து குருமணிகள் வான்புகழைத் துதிசெய்வோம் !

வாழ்க குருமணிகள் !

காவியத்தில் திருப்புமுனைகள்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 6, பக்கம் 280 இன் தொடர்ச்சி.)

கம்பன் சூர்ப்பணகையை முதன் முதல் அறிமுகப் படுத்தும் போதே இராவணனையும், அவன் குலத்தையும் ஒரு சேர அழிக்கும் வலியுடையாள் இவள் என்றே பேசத் தொடங்குகின்றான். உயிரோடு பிறந்து மறைந்து வாழ்ந்திருந்து, தக்க நேரத்தில் உடலை வீழ்த்தும் கொடிய நோய் போன்றவள் அவள் என்றும் கவிஞன் அறிமுகம் செய்கிறான்.

" நீலமாமணி நிற நிருதர் வேந்தனை
மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்!
மேலை நாள் உயிரொடும் பிறந்து, தான் வினை
காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் ஆனாள். "

சூர்ப்பணகை வரவும், அவள் இராமனைக் காண்டலும், காதல் கொண்டு உரைத்தலும், தன்னியல்புக்கு மாறாக இராமன் அவளொடு உரையாடலும், பின் நிகழ்வுகளும், அவள் ஏற்றிய காமத்தீயால் இராவணன் நிலை தடுமாறுதலும் அடுத்தடுத்து விரைந்து நிகழ்கின்றன. சீதை இராமனிடமிருந்து பிரிக்கப்படும் சூழல் அமைகிறது. மாயமானைக் கண்டு விழைவேதும் இல்லாச் சீதை விழைவு கொள்கிறாள். தெளிந்த அறிஞனாகிய இராமன் அதனைப் பிறழ உணர்கிறான். பதட்டம் நிறைந்த இலக்குவன் தெளிவொடு நிற்கிறான்! மாரீசன் மாயக்குரல் கேட்டு இலக்குவனைச் செல்லுமாறு பணிக்கிறாள் சீதை. அவன் பலபட மறுத்தும் அவள் உடன் பட மறுக்கிறாள். இறுதியில் இலக்குவன் சாவேன் என்ற சீதையை நோக்கி,

" தஞ்சுவது என்னை? நீர் சொன்ன சொல்லையான்
அஞ்சுவென்; மறுக்கி லன்! அவலம் தீர்ந்துஇனி
இஞ்சிரும்! அடியனேன் ஏகுகின்றனன்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ! "

என்று கூறிப் பிரிகிறான். காவியங்களில் திருப்பு முனை அமையும் போது, எல்லாம் கீழ் மேலாய், மேல் கீழாய் நிகழ்ந்து முடியும். விதியே முன்னின்று நிகழ்த்தும். விதிக்கு விதியாவேன் என்னும் இலக்குவனே 'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ' என்று பேசுமளவுக்குத் திருப்பங்கள் அடுத்தடுத்து விரைந்து நிகழ்ந்து முடிகின்றன. சீதை சிறைப்படுகிறாள். சடாயு உயிர் நீக்கிறார். சினங்கொண்ட இராமனை நோக்கிச் சடாயு,

"கொம்பிழை மானின் பின்போய் குலப்பழிகூட்டிக்கொண்டீர்
அம்பு இழை வரிவில் செங்கை ஐயன்மீர் ஆயும் காலை
உம்பிழை என்பதல்லால் உலகம் செய்பிழையும் உண்டோ?"

என அறிவு கொளுத்துகின்றார்.

நன் மனக் கைகேயி விளைத்த திருப்பத்தை நியாயப்படுத்திப் பேசும் கவிச் சக்ரவர்த்தி, சூர்ப்பணகை விளைத்த திருப்பத்தை 'விதிவழி' என ஏற்கின்றான். தீமை, தீயவர் புரியும் போது அதிலே ஆராய ஏதும் இல்லை. நல்லார் தீமை புரிந்தாலோ, அல்லது தீயர் நன்மை விளைத்தாலோ அங்கேதான் கவிஞன் நின்று சிந்திக்கத் தொடங்குகின்றான்.

காவியத்தேரின் சக்கரங்கள் :

காப்பியக் கவிஞன் உலகியல் அறிந்தவன். உயர்பண்புகளின் நிலைக்களனாகத் திகழ்பவன். கதை நடத்துவதே அவன் நோக்க மானால் திடீர்த் திருப்பங்களை எங்கெங்கும் அவனால் அமைக்க முடியும். கதைத்தேரின் சக்கரங்களாகவே காவியங்களில் திருப்பு முனைகள் அமைகின்றன. சக்கரங்களை உரிய இடங்களில் மட்டுமே பொருத்த முடியும். அவ்வாறு பொருத்தாக்கால் காவியத்தேர் நிலைகுலைந்து நின்று விடும்.

கவிஞனின் எல்லை :

புதிதாகக் கற்பனைக் காவியம் புனைவோன் திருப்பங்களைத் தன்னிச்சையாக அமைக்கலாம். வரலாற்று நிகழ்வுகள் மீதும், நாடறிந்த இதிகாசங்கள் மீதும் கவிஞன் தன்னிச்சையாகத் திருப்பம் அமைத்தல் இயலாது. முன்னரே அமைந்து கிடப்பன வற்றைத் தன் கவிதைச் சிறப்பால் அவன் அழகூட்ட மட்டுமே இயலும். அவ்வாறான நிலைக்களங்களில்தான் கவிஞனின் மனப் பண்பினையும், புனை திறத்தையும் கற்போர் கண்டு மகிழ இயலும்.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் திருப்பு முனைகள் மிகப் பல. இளங்கோவும், சாத்தனாரும் திருத்தக்கத்தேவரும், கொங்கு வேளிரும் கம்பரும், கச்சியப்பரும், வில்லியும் காவியத் திருப்பு முனைகள் அமைத்து மாபெரும் வெற்றி கண்டவர்கள். தனித்தனி வரலாறுகளின் தொகுப்பாயினும் சேக்கிழாரும் சுந்தரர் வரலாற்றில் தடுத்தாட்கொள்ளும் திருப்பத்தை அழகொழுகவே படைத்துக் காட்டுகின்றார்.

சில வினாக்கள் :

காவியங்களில் திருப்புமுனைகள் என்பது பற்றி ஒரு நீண்ட பேராய்வு நிகழ்த்த தடம் அமைந்து கிடக்கிறது. திருப்புமுனைகள் காவியத்தில் எங்கே, ஏன் வருகின்றன? அதன் இன்றியமையாமை என்ன? இத்திருப்பத்தை வேறு விதமாக அமைத்திருந்தால் மேலும் சுவை கூட்டியிருக்க முடியுமா? கவிஞன் படைத்த ஒரு திருப்பம் காவியப் போக்கில் இயற்கையாக அமைகிறதா? செயற்கை நெடி வீசுகின்றதா? கவிஞன் திருப்புமுனை படைத்து வெற்றி கண்டானா? தோற்றானா? தோற்றால் தோல்வி எதனால் விளைந்தது? திருப்பங்கள் பாத்திரங்களின் பண்பு நல முரண்பாடுகளில் அமைகின்றதா? காவியப் போக்கில் தாமே அவை அமைகின்றனவா? தனி ஒரு பாத்திரத்தின் வாழ்வியல் திருப்பம் காப்பியத் திருப்பம் ஆதல் கூடுமா? காப்பியத் திருப்புமுனைகளுக்குக் காரணங்காட்டி, நியாயப்படுத்தும் உரிமை கவிஞனுக்கு உண்டா? எல்லாத் திருப்புமுனைகளிலும் கவிஞன் நடுநிலையோடு காரணங்களை ஆராய்ந்து நியாயப் படுத்தியுள்ளானா? திருப்புமுனைகளுக்கு விதியைக்காரணமாக்குவது எந்த அளவுக்கு ஏற்கத்தக்கது?

மேலை கீழை நாடுகளின் இலக்கியத் திருப்பங்களோடு, தமிழ்க் காவியத் திருப்பங்களை ஒப்பிட இயலுமா? இயன்றால், தமிழ்க் கவிஞர்களின் நிலை என்ன? காப்பியத் திருப்புமுனைகளைத் தனி ஒரு இலக்கிய உத்தியாக வளர்த்து இலக்கணம் காணமுடியுமா? தற்கால உரைநடைப் புதினங்களில் காணலாகும் திருப்புமுனைகளுக்கு ஏதேனும் பொதுவான அமைப்பு விதி உண்டா?

இத்தகைய நிலைக்காரணங்களை உள்ளடக்கியுள்ளன காவியத் திருப்பு முனைகள்! அறிஞர் பெருமக்கள் நடுநிலை நின்று ஆய்வு நிகழ்த்தித் தமிழ் அன்னைக்குப் புகழ்சேர்ப்பார்களாக!

தேவார உவமை

வித்துவான் திரு. ச. சுந்தரேசம் பிள்ளை,
சிதம்பரம்.

ஒரு கருத்தை ஒருவருக்குக் கூறும்பொழுது அக்கருத்தைப் போன்ற வேறு ஒரு எளிய கருத்தை எடுத்துக் கூறி விளக்கினால் கேட்பவர்கள்புரிந்து கொள்வார்கள். இதற்குப் பயன்படுவதுதான் "உவமை" என்ற அணி. இவ்வணி அனைத்து அணிகளையும் விடச் சிறந்தது. இந்த உவமையணியைத்தான் பாவலரும் நாவலரும் பாமரரும்பாவையரும் அடிக்கடி பயன்படுத்துவர் "பால் போலும் இன்சொல், பவளம் போல் செந்துவர் வாய்" என்று சொல்லின் இனிமைக்குப் பாலையும், வாயின் அழகிற்குப் பவளத்தையும் உவமையாகப் பாவலர் கூறுவதைப் பார்க்கிறோம். பாலின் வெண்மை, பாலின் இன்சுவை, பாலின் இயல்பு யாவும் தெற்றென விளங்குகிறது இதில் சொல்லின் உண்மை, சொல்லின் இனிமை, உள் மனத்தின் இயல்புயாவும் புலப்படுகிறது. பைந்தமிழ்வளர்த்த பாண்டியன் நாரையின் மூக்கிற்கு ஏற்ற உவமை காணும் தானே பலநாள் ஏங்கினான். சத்திமுற்றப் புலவர் "பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!" என்று நாரையை அழைத்து தன் நிலையை உணர்த்தியதைக் கேட்டான் பாண்டியன். அன்று அவன் அடைந்த ஆனந்தம் அப்பப்பா! அளவிட முடியாது. ஆகவே, உவமையணி தன்னேரிலாத தனிப் பெருமையுடைய அணி. இவ்வணியைத் தேவாரம் அருளிய மூவரும் எவ்வெவ்வாறு எடுத்தாண்டு உள்ளனர் என்பதைச் சிறிதுநோக்குவோம். பாற்கடலில் சிற்றெறும்பு எவ்வளவு பாலைப் பருகமுடியும்? அதுபோல் ஒருசில உவமைத் தேவாரத்தை மட்டும் எடுத்து விளக்க முயல்கிறேன்.

1. திருவீழிமிழலையில் உள்ள மாதர்கள் மயில் போன்ற சாயலையும், மான் போன்ற விழியையும், மதிபோன்ற முகத்தையும், மாலை நேர இளவெயில் போன்ற குளுமையையும் ஒத்துள்ளார்கள்" என்கிறார் திருஞானசம்பந்தர்.

" மயிலும் மடமானும் மதியும் இளவேனில்
வெயிலும் போல் மாதர் வீழிமிழலையே."

(மயிலுமமறை - பாடல்)

2 திருவெண்காடு கடற்கரையை ஒட்டியிருக்கிறது எனவே கடற்கரை, குளக்கரை, வாய்க்கால் ஓரம் இங்கெல்லாம் தாழைகள் மிகுதியாக வளர்ந்துள்ளன. அதில் தாழம்பூ வாள்போல் நீண்டு நிமிர்ந்து பூத்துள்ளது. பூவின் ஒரிரு மடல்கள் விரிந்து மடிந்துள்ளன அதன் நிழல் நிலத்திற்படுகிறது. இது மீனைப் பிடிக்கக் கரையில் அமர்ந்துள்ள நாரைபோல் இருக்கிறதாம். தன்னைக் குத்தித் தின்ன வந்துள்ள நாரையாக நினைத்து அருகில் வந்த கெண்டை மீன் அஞ்சித் தாமரைப்பூவில் ஓடிஒளிந்து கொள்கிறதாம். மீனின் அறியாமைச் செயலைக் கண்ட கடல் அலையின் முத்துக்கள் சிரித்துநகையாடுகிறதாம். என்னே! ஞானசம்பந்தரின் உவமை நயம்! கற்பனை வளம்! இதில் கற்பனை மிகுதியாக இருந்தாலும் தாழம்பூவின் நிழல் நாரைபோல் காட்சி தருகிறது என்ற உவமை நயத்தைக் கண்டு இன்புறலாம். இதோ அவர் பாடல்!

“ விடம் உண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைகாட்டும் காட்சியதே ”

(வெண்காட்டு - பதிகம், பாடல் 4)

3. பனி படர்ந்த கயிலைமலை வெள்ளைப் பளிங்கு போல் உள்ளது இது வெண்ணீறு சண்ணித்த விரிசடைச் சிவன் போல் காட்சி தருகிறது இதன் பக்கத்தில் பசுமைபடர்ந்த மலை, மரகதம் போல் உள்ளது இது பார்வதி போல் காட்சி தருகிறது. காணும் பொருள் எல்லாம் கண்ணுதற் கடவுளாகவும் உமையவளாகவும் காண்பதுதானே நம் சைவ மரபு!

“ சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர்மரகதம்
அடுத்தாற் போல்
அந்தணர் உமையோடு இன்புறுகின்ற ஆலவாய் ”

(மங்கையர்க்கரசி - பதிகம், பாடல் 7)

என்கிறார் திருஞானசம்பந்தர்.

4. சமணர்கள் கருப்பர், முரடர், உடல் பருமன் உள்ளவர். இவர்கட்கு ஏற்ற உவமை என்ன என்று பார்க்கிறார். அஃறிணையாகவும் கூறவேண்டும் என்று எண்ணுகிறார். உடனே

‘ பாழியுறை வேழம்நிகர் பாழ்சமணர் சூழும் உடலாளர்
உணரா ”

(சுரருலகு - பதிகம், பாடல் 10)

என்று பாடுகிறார் பாலறாவாயர்.

5. ஒரு பாம்பு தன் உணவிற்கு ஒரு தேரையைக் கவ்விப் பிடித்தது. அப்போதுதான் அத்தேரை வாயைத் திறந்து ஒரு ஈயைத் தன் உணவிற்காகக் கவ்விப்பிடித்தது. அந்தோ பரிதாபம்! பாம்பின் வாயில் தேரை. தேரை வாயில் ஈ. இப்போது இவ்விரண்டும் என்ன நினைத்திருக்கும்? தேரை எத்தனை இடர்ப்பட்டிருக்கும்? நாம் இந்த நிலையை எண்ணினாலும் குலை நடுங்குகிறது. வாழ்வு அநித்தியம் என்ற உண்மையும் புலப்படுகிறது. இதனைப் "பாம்பின் வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை" என்கிறார் அப்பர் சுவாமிகள். (ஓம்பினேன் கூட்டை-பதிகம், பாடல் 1)

6. படகு ஒன்றில் ஏறினார்கள் பள்ளி மாணவர்கள். படகு ஓட்டி பலகாலமாகக் கடலில் பழக்கமுள்ளவன். படகு அலைமேல் குதித்துக் குதித்து ஏறி இறங்கிக் கடலில் உள்ளே சென்றது. அப்போது மாணவர்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. முன்னமே மீன் பிடிக்கச் சென்ற படகு ஒன்று அதிவேகமாகக் கரையை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தது. எதிர்பாராமல் திடீர் என்று புயற்காற்று வீசியது. இரு படகுகளும் ஒன்றோடொன்று மோதி உடைந்தன. பலகைகள் நாலா பக்கமும் சிதறின. பலர் கடலுக்குள் வீழ்ந்தனர். மாணவர்களின் ஆனந்தக் குரல் அவலக் குரலாக மாறிற்று. படகோட்டிகள் தன் கரங்களாலேயே நீந்திக் கரையேறினார்கள். மற்றவர்கள் கதி தெரியவில்லை. ஒரு மாணவன் கையில் ஒருபலகை கிடைத்தது. அதுதான் அப்போது அவனுக்குப் பெருந்துணை! அருந்துணை! அப்பலகை அலைமீது ஏறி இறங்கி அவனைக் கடற்கரையில் கொண்டு வந்து சேர்த்தது. மற்ற பலகைகளும் கரை வந்து சேர்ந்தன. ஆனால் அதில் மற்ற மாணவர்கள் வரவில்லை. கரை சேர்ந்த மாணவனைப் படகோட்டிகள் கண்டனர். என்னே அதிசயம்! அம்மாணவன் கழுத்தில் உருத்திராட்சம் இருந்ததைக் கண்டனர். அவன் வாய் பஞ்சாட்சரத்தை ஓதியபடி இருந்தது. படகோட்டிகள் இருவரும் அவனைத் தழுவியணைத்து உச்சிமோந்து தன் குடிசைக்குள் கொண்டு வந்து சேர்த்தனர். களைப்பு நீங்கச் செய்தனர். அப்போது அவன்

"ஞானப்பெருங்கடற்கோர் நாவாய் அன்னபூரணன்"

என்ற அப்பர் வாக்கைச் செப்பியபடியே இருந்தான். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். (நாரணன்காண் தாண்டகம்)

இறைவன் திருவடி படகுபோல் நம் பிறவிக் கடலைக் கடக்க உதவும். நாம் பேரானந்தக்கரை சேர முடியும்.

7. ஒளிகண்டவுடன் இருள் மறைகிறது. கதிரவன் ஒளிவந்தவுடன் பனி மறைகிறது. இதுபோல் காலன் வந்தவுடன் உயிர் பிரிந்து உடல் மாயும். இது வாழ்க்கை. இன்று செய்வோம், நாளை

செய்வோம் என்று இப்படியே நாளைக்கழித்து இடர்ப்பட்டு காலம் கழிக்கின்றோமே! நல்ல நிலையில் இருக்கின்ற போதே அவன் நாமம் நவிற்றி அவன் பேரருளைப் பெற்று உய்யவேண்டாமா? என்று சுந்தரர் தனக்குச்சொல்லிக் கொள்வதுபோல்நமக்குக்கூறுகின்றார்.

" புல்நுனைப்பனி வெங்கதிர்கண்டாற் போலும் வாழ்க்கைப்
பொருளிலை நாளும்
என்னெனக்கினி யிற்றைக்கு நாளையென் றிருந்திடருற்றனன்
எந்தாய்
முன்னமேயுன சேவடிசேரா மூர்க்கனுகிக் கழிந்தன காலம்
இன்னமென் றனக் குய்வகையருளாய் இடைமருதுறை
எந்தைபிரானே "

இங்ஙனம் இனிய உவமைகள் பல தேவாரங்களில் பயில்கின்றன. ஓதி உணர்ந்து இன்புறுவோமாக.

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

வைத்தீசுவரன் கோயில்

6—4—90 இன்று என் மனைவியுடனும், நண்பர்கள், நீதிதுறை நடுவர்கள் உடனும் இத்திருக்கோயிலில் குடிக்கொண்டு அருள் பாலித்துவரும் தெய்வங்களை மனநிறைவோடு தரிசித்து அருள் பெரும் பாக்கியம் கிடைத்தது. இவ்வாதீனத்தின் கீழ் பராமரிக்கப் படும் திருக்கோயில்களில் பல சிறப்பு அம்சங்கள் இருப்பினும் அவற்றுள் என்னை கவர்ந்தன திருக்கோயில்களைத் தூய்மையாக, துப்புரவாக வைத்து இருப்பதும், அர்ச்சகர்களும், ஓதுவாரும், நிர்வாகிகளும் தங்கள் கடமைகளைச்செவ்வனே நிறைவுடன்செய்து, பக்தர்கள் மன மகிழ்வோடு, மன நிறைவோடு செல்ல ஆவன செய்வதாகும். இத்திருக்கோயிலுக்கு ஏராளமான நிலங்கள் சொந்தமாக இருப்பினும் வருமானம் அவைகளிலிருந்து குறைவாக வரும் நிலையிலும், சிறப்போடு பணியாற்றிவருவது பாராட்டுவதற் குரியதாகும். திருக்கோயில்களின் வருமானங்கள் முறையாகக் கிடைக்க அரசாங்கம் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கும் என அரசு அறிவித்து இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகக் கொள்ள வேண்டும். ஆலயப்பணிகள், மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் வைத்தீஸ்வரன் அருள்புரிவராக.

(ஒ—ம்) கோ. வேங்கடசாமி,

6—4—1990, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.

நம்மைப் பேணும் அம்மை

வித்துவான் திரு. சி. குமரேச பிள்ளை
சுசீந்திரம்.

(மலர் 49, இதழ் 6, பக்கம் 288 இன் தொடர்ச்சி)

" இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; தோற்றி
யிறைவனே மீண்டிறக்கம் செய்வான்; — இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயர்
வந்தால் அதுமாற் றுவான். "

என்று பாடினார்.

பின்னர்த் திருஇரட்டைமணிமாலைபாடிப் போற்றினார். அதில்,

" ஈசனவன் அலாதில்லை எனநினைந்து
கூசி மனத்ததைத்துக் கொண்டிருந்து — பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை காக்கும் பிரான். "

என்று எடுத்துரைத்தார்.

அம்மையார் சிவ உணர்வு மிக்கவராகி மனத்திலும் கடுகி கைலை நோக்கிச்சென்றார். கைலையைக் காலால் மிதிக்கலாகாதென தலையால் நடந்துசென்றார். தலையால் நடந்துவரும் அம்மையாரை உமாதேவியார் முதலில் கண்டார். "தலையினால் நடந்திங்கேறும் எம்பெருமானேர் எற்பின்யாக்கை அன்பென்னே!" எனவியந்தார்.

இருவினை ஒப்பு மலபரிபாகம் பெற்ற ஆன்மா சத்திநி பாதம் என்ற அருள சக்தியால் ஈர்க்கப்பட்டுப் பரம் பொருள் திரு அருளுக்கு ஆளாகின்றது. மலபரிபாகம்பெற்ற அம்மையாருக்குத் திருவருள் சக்தியின் அருள் நோக்கே முதலில்வாய்க்கிறது. வியந்து வினவிய தேவியாரை நோக்கிச் சிவபெருமான் 'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே" என்றனர். மேலும் அம்மையார் அருகு வந்தணைய நோக்கி ' அம்மையே ' என்னும் ஒப்பற்ற மொழியால் உலகம் எல்லாம் உய்யவே அழைத்தார்.

இவ்வாறு நம்மைப் பேணும் அம்மை எனப் பெருமானைக் குறிப்பிடப்பட்டு 'அம்மையே' என அழைத்ததேன்? அம்மையார் உள்ளத்தில் தாய்மை உணர்வு கனிந்திருந்தது. சிவ பெருமானைக் குழந்தையாகக் கருதித் தம் அற்புதத் திருவந்தாதியில் பாடியிருக்கின்றார்.

சிவபெருமானாகிய குழந்தை, சிறுபலிக்காக இரவில் ஊர் ஊராகச் சுற்றுகிறது. மகன் பிச்சை எடுப்பதை ஈன்றதாய் பொறுப்பாளோ? தந்தைபொறுத்தாலும் தாய்பொறுப்பாளோ? தேவரெல்லாம் பிச்சையெடுப்பதினின்றும் பிரானை விலக்காது இருப்பது கண்டு பெரு வருத்தம் கொள்கின்றார் அம்மையார்

" திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியேல்
எங்கள் பெருமானை என்றிரந்து — பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம் விலக்க வல்லமே?
தானே அறிவான் தனக்கு "

எனக் கூறித் தடுக்கின்றார்.

ஒருதாய்க்கு ஒருமகன். அவன் திருமணம் செய்துகொண்டான். அவன் புது மனைவியிடன் கடைவீதி, பொருட்காட்சி, படக்காட்சி என்று சுற்றி வருகின்றான். இவ்வாறு கணவன் தன் மனைவி மீது கொண்ட காதலால் அவளைத் தான் செல்லும் இடங்களுக் கெல்லாம் அழைத்துச் செல்கின்றான். இதைக்கண்ட அவனது தாய் மகனை அழைத்து, 'மகனே நீ ஆண்பிள்ளை எங்கு வேண்டுமாயினும் செல்லலாம் ஆனால் அவளோ மெல்லியலாள், கண்ட இடம் எல்லாம் அழைத்துச் செல்லாதே. அவள் இயல்புக்கு இது ஏற்றதன்று' என்று அன்பாய்க் கூறித் தடுப்பது உலகவழக்கு. இது போலக் காரைக்கால் அம்மையார் சிவ பெருமானைத் தடுக்கின்றார். உன் பாகத்து எப்போதும் உமாதேவியை வைத்து கொண்டே யிருக்கிறாய்; இரவிலேபேயோடு சுடலையாடும் இயல்புஉனக்குண்டு. எனவே நீ சுடலை செல்லும் போது உமாதேவியைப் பாகத்து எழிலாக வைத்துக் கொண்டு போகாதே' என்று கட்டளையிடுகின்றார்.

" குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத் து)
எழிலாக வைத்தேக வேண்டா - குழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு "

எனப்பாடும் அளவிற்கு அம்மையாரிடம் தாய்மை அன்பு கனிந்திருந்தது.

அம்மையார் பெருமானை 'அப்பா' எனப் போற்றி பங்கயச் செம்பொற்பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்தாள். சிவபெருமான் அம்மையாரை யாது வேண்டுமென வினவ, அம்மையார்,

" இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார். "

இறவாத இன்பம், இறவாத அன்பு இரண்டு பிரிக்க முடியாத இரு குணங்கள். என்றும் நீங்காத இன்ப அன்பை அம்மையார் வேண்டுகின்றார். 'ஈறிலாப் பதங்களின்' யாவையும் கடந்தஇன்பமே என்னுடைய அன்பே' என்பர் மாணிக்கவாசகர். ' அன்புருவாம் சிவமே ' என இசைப்பர் வள்ளலார்.

'அன்பினுல் இன்பம் ஆர்வர்' எனப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார். திண்ணனார் காளத்தி மலையேறும் போது முடிவிலாத இன்பமான அன்பினை எடுத்துக் காட்டினார் சிவபெருமான். அம்மையாரும் அவ்வின்பவன்பை வேண்டுகின்றார். அத்துடன் மீண்டும் பிறவாமையை வேண்டுகின்றார்; பிறந்தால் இறைவனை மறவாத நிலையினையும் அத்துடன் வேண்டுகின்றார்.

திருநாவுக்கரசரும்,

" புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும் "

என வேண்டுகின்றார்.

அம்மையாருக்கு வரம் வேண்டும் அவா தணியவில்லை. மேலும் வேண்டுகின்றார். ' அப்பா எனக்கு இன்னும் கொடு ' என்று கேட்கின்றார். நான் இவ்வுலகில் இருக்கும் வரை உன் திருநடனத்தைக் கண்டு கொண்டே இருக்க வேண்டும்' என வேண்டுகின்றார்.

அம்மையார் விருப்பியபடி திருவாலங்காட்டில் தம் நடனத்தைக் கண்டு கொண்டேயிருக்கும் படியான பேற்றினை அளித்தார் பெருமான்.

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டியதெல்லாம் ஒரே வரம் தான். 'இறவாத இன்ப அன்பு ஒன்று தான்' அவன் அன்பிலே இன்புற்றமர்ந்து கொண்டிருக்கின்ற நிலை ஒன்று தான் மீண்டும் மீண்டும் வேண்டுகின்றார். ஆன்மா சாயுச்சிய நிலையில் சிவானுபவத்தை மருவி இன்ப அன்பு நுகர் நிலை கொண்டிருக்கும். அந்நிலையை முதலில் வேண்டினார். மண்ணில், அவனை மறவாத சிவன் முத்தி நிலையில் சிவானுபவத்தை மருவிக் கொண்டிருக்கும். அதனையே மீண்டும் வேண்டுகின்றார். சிவன்முத்தர், ஆலயத்தை அரனென வழிபடும் கொள்கைப்படி திரு நடனத்தைக் கண்ணாரக் கண்டு அயராத இன்ப அன்பில் திளைக்கும் நிலையினை மீண்டும் வேண்டுகின்றார். சுந்தரர் பெருமானும், தில்லைப் பெருமான் திரு நடனத்தைக் கண்டு,

“ ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

அவ்வாறு மகிழ்ச்சியால் மலர்ந்த நிலையில்,

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன் திருநடம் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம்'' என்று இறவாத இன்ப அன்பிலே திளைத்தார். இத்திருப்பாட்டின் அநுபவப் பொருளை வினவித் தருமை ஆதீனம் 4 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் ஸ்ரீ குமரகுருபரரை ஆட்கொண்டருளினார்கள். அந்நிலைமையை அம்மையாரும் திருவாலங்காட்டில் பெற்று அண்டம் நிமிர்ந்தாடும் கோலம் கண்டு இறவாத இன்பவன்பநிலை எய்தியிருந்தார். அந்நிலையிலே மூத்தத் திருப்பதிகம் பாடினார் அம்மையார். பாடி இறவாத இன்ப அன்பு நிலையில் திளைத்தவாறே பங்குனி சுவாதி நாளில் பிறவாத நிலையெய்தி, இறவாத இன்ப அன்பு நிலையாம் சிவாநுபூதியில் திளைத்தவாறே திருவடிக்கீழ் அமர்ந்திருக்கின்றார் அம்மையார்.

நம்மைப் பேணும் அம்மையார் திருவடி வாழ்க!

பதிகப் பெருவழி காட்டிய பாவலர்

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.

முன்னுரை :

பத்துப்பாடல்களால் பண்பு கிளப்பது பண்டைமரபு. அதனுல் பண்பு கேட்போர் மாட்டும் உரைப்போர் மாட்டும் நெஞ்சில் பதிந்து நிலைத்த பயனை நல்கும். 'பதிற்றுப்பத்து' அதற்கோர் எடுத்துக்காட்டு. திருக்குறள் மற்ருேர் எடுத்துக்காட்டு. சங்க காலத்தில் பெருவழக்காகத் திகழ்ந்த பதிகப் பெருவழி, சங்கம் மருவிய காலத்தில் சுருங்கி வரலாயிற்று. இப்பதிகப் பெருவழியை மீண்டும் புதுப்பித்தவர் காரைக்காலம்மையார்; இவர் பாடியவை மூத்த திருப்பதிகம் எனப்படும். இவர்க்கு அடுத்த காலத்தில் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இவர் பாடிய தேவாரம் பதிகப் பெருவழியை என்றும் நிலைநிறுத்தியது.

பதிகம் என்பது யாது?

பதிகம் என்பது பதிலைப் பற்றியது என்றும், தலைமைப் பொருள் பற்றியது என்றும், ஒரு பொருள் நுதலி வருவது என்றும் கூறுவர். சிலப்பதிகாரத்தில் பதிகம் என்ற பகுதி நூல் தோன்றிய வரலாற்றைப் பாயிரமாக விளக்குகிறது. பத்துப்பாடல்களைக் கொண்டது பதிற்றுப்பத்து என்பது; ஒரு பொருளைப் பற்றிப் பத்துக் கூறுகளாக ஆய்வு செய்யும் முறை திருக்குறளால் அறியலாம். இப்படி ஆய்வதால் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் ஒரு பொருளைச் சிந்திக்கவும், அதனுல் கருத்தில் இருத்தவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாய்ப்பினையே 'பதிகப் பெருவழி' என்று கூறலாம். இப்பெயரை முதன்முதலில் சூட்டியவர் நம்பியாண்டார்நம்பிகள்.

வழிகாட்டி :

வாழ்வின் உயர்வுக்கு வழிகாட்டிகள் பலர் வேண்டப்படுகின்றனர். 'பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறுத்தும்' ஆற்றுப் படை இலக்கியங்கள் வழிகாட்டி இலக்கியங்களாக இலங்குகின்றன. அவற்றுள் தலைசிறந்த வழிகாட்டி இலக்கியம் திருமுரு

காற்றுப்படை. நக்கீரர் ஒருவழிகாட்டியாக விளங்குகிறார். எனினும் அவரது வரலாறு பெருவழிகாட்டத் துணைபுரியவில்லை. நூலும் மக்களுக்குதவும் மட்டலமாயில்லை. சிறப்பு என்னும் செம்பொருளைச் சிந்தித்த பெரும்புலவர்கள் பலருண்டு; அப்பொருளைவந்திக்க வாழ்ந்து காட்டிய பெரும்புலவர் ஒருவருமிலர். நாம் செய்த நற்றவத்தால் வாழ்ந்து காட்டிய வள்ளற்பெருமான் திருஞானசம்பந்தர் ஒருவரே ஆவார்.

> " ஆற தேறுஞ் சடையான் அருள்மேய அவனியர்க்கு
> வீற தேறுந் தமிழால் வழிகண்டவன் "

எனப் பதினோராந் திருமுறை போற்றித் திறனாய்வு செய்கிறது.

சேக்கிழார் உதவி :

தமிழால் வழிகாட்டிய தண்ணளியாளர் பலருண்டு. அவருள் சேக்கிழார் ஒருவரே தண்ணளியாளரை ஆராய்ந்திருக்கின்றார். ஆராய அவருக்குவாய்ப்பு ஏற்படத் திருவருள் கூட்டியது. 'பதிகப் பெருவழி' காட்டிய பாவலர் திருஞானசம்பந்தரை - வேதநெறி தழைத்து ஓங்க - மிகு சைவத்துறை விளங்க - பூத பரம்பரை பொலியத் தோன்றியவர் என்று சேக்கிழார் சுட்டிக்காட்டிய தொடர் - அச்சேக்கிழார் திருமறைக்காட்டில் திருக்கதவம் திருக்காப்புச் செய்த சம்பவங்களிக்கும் பெரியபுராணப்பாடல் ஒன்றால் விளக்கப்படுகிறது. வேதம் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது; அதன் அருளிப்பாடு பற்றி கேள்விப்பட்டதுதான். ஆனால் தமிழ் வேதம் விரித்த தமிழ் ஞானசம்பந்தரின் அருளிப்பாட்டினைக் கண்கூடாக உணர்ந்தோம்; வேத வழியை மாற்றி வேதாரணியத்தில் சைவத்துறை வழிகண்ட திருஞானசம்பந்தரைக் கீழ்க்கண்டவாறு அறிமுகம் செய்து உதவுகிறார்.

> " திருமறை நம்பர் தாமுன் பருள்செய்த வதனைச் செப்பும்;
> ஒருமையில் நின்றதொண்டர் தம்பிரானார்பால் ஒக்க
> வரும் அருட்செய்கை தாமே வகுத்திட வல்லோரென்றால்
> பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு இடையீடு பெரிதாம்
> [அன்றே. "

என்ற பெரியபுராணம் பதிகப் பெருவழியைக்கிளந்த ஒதும் பகுதியாகும்.

பதிகப் பெருவழி :

பதிகம் பாடிப்பணியும் திருநெறி மூவர் முதலிகட்கே உரியது. அவருள்ளும் திருஞானசம்பந்தரே மூலவர்; முதல்வர். சோழி

முதல் திருநல்லூர்ப் பெருமணம் வரை பாடிப் பணிந்த அவர் திருநெறி - திருநெறிய தமிழாயிற்று. வேதம் - அற்புதம் செய்த வரலாறு கேட்கப்பட்டது போல் - தமிழ்வேதம் அற்புதம் செய்ததனைப் பதிகங்கள் உணர்த்தின. அதனை உணர்த்திய பெருமான் திருஞானசம்பந்தர். பதிகம் மூலமாக இறைவனைப் பரவவழிகாட்டிய திருஞானசம்பந்தரை நம்பியாண்டார் நம்பிகள் ' பதிகப் பெருவழி காட்டிய பாவலர் ' எனப் பரவுகின்றார். அப் பாடல் பதினோராம் திருமுறையில் ஒளிர்கிறது.

முடிவுரை :

'செந்தமிழ்உறைக்கப்பாடியவர்' என்று திருஞானசம்பந்தரை திருநாவுக்கரசர் பாராட்டுவார்; 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் என்றுசுந்தரமூர்த்திகள் விரித்துரைப்பர். சேக்கிழார்'சிவம்போலத் தாமே ஆணை கூறவல்லவர் திருஞானசம்பந்தர்' என்று சிந்திப்பர். எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் அனைவரும் உய்வதற்குப் பெருவழிகாட்டிய பெருமான் திருஞானசம்பந்தர் என்று நம்பிகள் உண்மை கண்டார். அவ்வுண்மையைத் திறந்து பார்க்கும் திறவு கோலாகச் சேக்கிழார் பாடல் விளங்குகிறது. அதனை உணர்ந்து பதிகப் பெருவழி போற்றுவோமாக.

கடிதம்

உ

முருகா

"வேலை வணங்குவதே வேலை"

தொலைபேசி 565666

கிருபானந்தவாரி

107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை - 600 002.
15—12—90.

நேரிசை வெண்பா

தருமைஆ தீனத் தவமணியே! நின்தாள்
ஒருமை யுடன்கண் டுவந்தேன் — பெருமைமிகும்
மெய்ஞ்ஞான ஆட்சியது மேதினியில் ஓங்கியே
என்ஞான்றும் வாழ்க இனிது.

அடிமை

கிருபானந்தவாரி.

ஸ்ரீ கங்காளமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,
தருமபுரம்

தியான சுலோகம்

ரக்தாபம் ஸ்மிதவக்த்ரமிந்து மகுடம் வாமேது தோர்தண்டகே
த்ரியக்ஷம் வேதகராம்புஜம் சதத்ருதே: கங்காள வீணதரம்
ஸவ்யே யஷ்டிதரம் பரேடமருகம் ஸவ்யாபஸவ்ய க்ரமாத்
டங்கம் க்ருஷ்ணம்ருகம் கங்காளதேவம் பஜே.

பொழிப்புரை :

சிவந்த நிறமுள்ளவரும் புன்சிரிப்புள்ள முகத்தை உடையவரும் பிறை அணிந்தவரும் நான்கு கைகள் உள்ளவரும் இடது தோளில் வீணையைத் தாங்கியவரும் வலது பாகம் மேற்கையில் மழுவையும் கீழ்க்கையில் தண்டத்தையும் தாங்கியுள்ளவரும் இடது பாகம் மேற்கையில் மானையும், கீழ்க்கையில் உடுக்கையும் தாங்கியுள்ளவருமான ஸ்ரீ கங்காளமூர்த்தியைத் தியானிக்கிறேன்.

விளக்கம் :

சிவாலயத்துள்ள திருவிளக்கொன்று சுடர்தட்டி அணையும் தறுவாயிலிருந்தது. சிவபெருமான் உமையம்மையைப் பார்த்து இத்திருவிளக்கைத் தூண்டிவிடுவோர் மூவுலகையும் அரசாள்வர் என்றருளினார். அப்பொழுது ஒரு எலி விளக்கின் மீது ஏறி எண்ணெய் குடிப்பதற்கு முற்பட்டது எரியும் திரியருகில் வாய் வைத்ததால் சூடுபட்டு மூக்கைச்சிலிர்த்தது. அதனால் திரிதூண்டப் பெற்று விளக்கு நன்றாக எரியத் தொடங்கிற்று. இறைவன் எலிக்கு மூவுலகையும் அரசாளும் பேற்றை அருளினார். எலி மாபலி என்னும் பெயருடன் அசுரர்குல அரசனாகப் பிறந்தது. தானவர் குலம் வலிமிகுந்து தழைத்தது. வானவர்கள் அஞ்சினர். திருமாலிடம் தங்கள் குறைகளைக் கூறினார்கள். திருமால் காசிபமுனிவர்க்கும் திதிக்கும் மைந்தனாக வாமன உருவில் தோன்றினார்.

மாபலி அசுர அரசனாக இருந்தாலும் நற்கருமங்கட்கு வாரி வழங்கும் கொடையாளனாகஇருந்தான். வாமனவடிவம் கொண்ட மாயவன் மாவலியிடம் சென்று மூன்றடி மண்கேட்டார். சுக்கிராச்சாரியார் தடுத்தும் கேளாது மாவலி வாமனர்க்கு மூன்றடி மண் அளித்தான். மாயவன் உலகளாவிய திரிவிக்கிரம அவதாரம் எடுத்து ஓரடியால் நிலவுலகையும், மற்றொரு அடியால் வானுலகையும் அளந்து மூன்றாவது அடியை மாவலியின் சிரமேல் ஊன்றி அவனைப் பாதாள உலகிற்கு அனுப்பினார்.

மாவலியைக் கொன்ற வெறியால் அகந்தைகொண்டு ஆரவாரித்து உலகை அழிக்கத் தொடங்கினார் திருமால். தேவர்கள் அஞ்சி நடுங்கிச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் உலகைக் காக்கத் திருவுளங்கொண்டு விரைந்து சென்று திருமாலின் மயக்கம் தீரச் சில வார்த்தைகள் கூறினார். பிருகுமுனிவர் சாபத்தால் இறுமாப்புத்தவிராதிருந்தார் திருமால். பெருமான் வச்சிரதண்டமொன்றால் திருமாலின் மார்பில் அடித்தார் வாமனர் நிலமிசை இறந்து வீழ்ந்தார். பெருமான் அவரது தோலைக் கஞ்சுகமாகத்தரித்தும், முதுகெலும்பைத் தண்டமாகக் கொண்டும் காட்சிதந்து கயிலைசென்றார்.

அச்சுதன் அகந்தை நீங்கிப் பண்டைய உணர்வு பெற்றுப் பரமனை வழிபட்டு வைகுந்தம் சேர்ந்தார். மாவலி நற்கதி பெற்றான்.

சிவபெருமான் வாமனரது முதுகெலும்பைக் கோதண்டமாகக்கொண்ட திருக்கோலத்தில் கங்காளர் எனப் பெறுவார். ஸ்ரீ ட்டைநாதர் என்ற மூர்த்தமும் இதுவேயாகும்.

ஸ்ரீ சரப மூர்த்தமும் இவ்வாறே திருமால் நரசிங்க உருவம் எடுத்து இரணியனைக் கொன்ற கொலை வெற்றிதரச் சரபப்பறவை உருவமெடுத்து திருமாலின் வெறியகற்றி அருள்புரிந்த மூர்த்தமாகும்.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

" நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவானு லகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே."

— திருநாவுக்கரசர்.

திருச்சிற்றம்பலம்

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 5, பக்கம் 232 இன் தொடர்ச்சி.)

வாழ்த்திய நாவும் வருந்திய உள்ளமும் :

சில சந்தர்ப்பங்களில் சொல்லவேண்டிய சொல்லைச் சொன்ன பிறகு, உள்மனம் படும்வேதனை சொல்லில் வராமல் போகும் நிலையுண்டு. வாழ்த்தியமைக்காக வருந்திய உள்ளம் என்று தலைப்பை அர்த்தம்செய்து கொள்ளக்கூடாது. வெளியில் வாழ்த்த வேண்டிய அவசியம் - சொல்லின் தீவிரம் மனத்தைத் தாக்கிய போது, அதனை ஏற்க முடியாத பலவீனம் என்று இந்நிலையைச் சிந்தாமணியை வைத்துப்புரிந்துகொள்ளலாம். கட்டியங்காரனின் சிறையிலிருந்து விடுவித்துச் சுதஞ்சணன் சீவகனை எடுத்துப் போகிறான். அதுவரைக்கும் நன்மையே விளைந்தது என்பதால் தத்தை அச்செயலை வரவேற்று 'நன்றுண்டாக' என வாழ்த்தினாள். விநாடிநேரம் கழித்து, சீவகனை இவ்வாழ்த்தினால் நாம் பிரிய வேண்டுமே என்பதை மனத்துள் உணர்ந்தாள். சீவகனைப் பிரிய மாட்டாத பெண்மையுள்ளம் நோயுற்று அவனை இனிக்காண்ப தெப்போது எனக் கவன்றது என்கிறார் திருத்தக்கதேவர்.

குன்றுண் டோங்கு திரள்தோளவற் கொண்டெழுந் தேகலும்
நன்றுண்டாக வென நன்னுதல் வாழ்த்தினாள் வாழ்த்தலும்
ஒன்றுண்டா யிற்றவ ளுள்ளழி நோயுறு காளையை
என்றுண்டாங் கொல்லினிக் கட்படு நாளெனுஞ் சிந்தையே

(சிந். 1159)

கம்பர் இப்பெண்மையியல்பைச் சுமித்திரையிடம் வைத்துக் காட்டுகிறார். காட்டுக்கு ஏக இராமனைப் பணித்தாள் கைகேயி. அவனை விநாடியும் பிரிந்திருக்க முடியாத இலக்குவன் இராமனைப் பின்தொடர்ந்தான். இராமன் சொன்ன சமாதானங்களை ஏற்காமல் கானகம் செல்லத் தயாராகத் தன்முன்வந்த மகனைப் பெருமித உணர்வுடன் நோக்கினாள் சுமித்திரை. 'மகனே! இனி உனக்குத் தந்தையும் தாயும் இராமனே என எண்ணுவாயாக.

கானகமே அயோத்தியாகும். அவன்பின் தம்பியென்று உரிமை பாராட்டிச் செல்லாதே அடியார் போலே பணிசெய். இராமன் இந்நகருக்குத் திரும்புவானானால் நீயும்வா இல்லையானால் அவனுக்கு முன்பாக நீ உயிரை விட்டுவிடு ' என்றாள். இராமன் மேல் வைத்த அன்பு இலக்குவன் தன்மகன் என்பதையும் மறக்க வைத்தது. இப்படிச் சொன்னபின்புதான் மகனை மாளச் சொன்ன வார்த்தையின் கொடுமை மனத்திற்குப் புரிந்தது. வார்விழிசோர நின்றாள் என்று அந்நிலையை வெகு நயமாகக் காட்டினார் கம்பர்.

பின்னும் பகர்வாள் மகனே இவன்பின் செல் தம்பி
என்னும்படியன்று, அடியாரின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின்வா அது அன்றேல்
முன்னம்முடி என்றனள் வார்விழிசோர நின்றாள். (கம். 1752)

ஆகவே சில நேரங்களில் மனம் எண்ணுவதை மேல்நிர்வாகம் செய்துவிடுகின்றனவாய்வார்த்தைகள். இருந்தாலும் அந்நிலைப்பின் எழுந்த மெய்ப்பாட்டை மறக்க முடியவில்லை.

விதியின் செயலை மதிக்கும் செயல் :

நன்மை வரும்போது மகிழ்வதும் தீமைவரும்போது துவள்வதும் சராசரி மனித இயல்பு. இன்பத்துள் இன்பம் விழையாதவன் மட்டுமே துன்பத்துள் துன்பமுறுதலில்லாதவனாவான். இரண்டும் நடப்பது விதியால் என்று உணர்பவர்கள் மிகக்குறைவு.

சிந்தாமணியில் சீவகன் கட்டியங்காரனால் சிறைப்படுத்தப் பட்டபோதும், சுதஞ்சனால் சிறைமீட்கப்பட்டபோதும் வருத்தமும் மகிழ்வும் கொள்ளவில்லை. எல்லாம் விதியின் செயல் எனத் தெளிந்திருந்தான் என்றார் ஆசிரியர்

விலங்கிவில் லுமிழும் பூணான் விழுச்சிறைப்பட்ட போழ்தும்
அலங்கலந் தாரினன்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலு மகிழ்வு நெஞ்சிற் பொலிதலு மின்றிப் பொன்னார்ந்
துலங்கலந் துயர்ந்த தோளானூழ்வினை யென்றுவிட்டான்

(சிந். 1167)

கம்பர் இராமபட்டாபிஷேகநிகழ்ச்சியில் விதியின் செயலை எண்ணிப் பார்க்கிறார். இராமன் பட்டம் ஏற்க இசைந்த போதும் இழக்க முன்வந்தபோதும் ஒரேநிலையில் நின்றதை - விதியின் கரங்களில

நான் கட்டுண்டு நிற்கிறேம் என்றுணர்ந்ததை அழகாகக் காட்டுகிருர்.

நமைப் புரந்தாள் மதியின் பிழையன்று, மகன் பிழையன்ற விதியின்பிழை இதற்கு என்ன செய்ய முடியும் என்று இலக்குவனுக்குச் சமாதானம் சொல்லும் பதிலில் தன் மனநிலையையும் தெளிவாகக் காட்டிவிடுகிருன்.

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உணரக்கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா

(கம். 1602)

இப்பாடலில் மூன்று காலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற முக்காலங்களிலும் இராமன் முகம் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் பாடலிது. தாமரையை முன்பும் பின்பும் ஒத்திருந்தது. (தசரதனுல் அரசு கிடைத்தபோதும் பின் அன்னையால் அரசபாரம் விலகியபோதும்) பரதனுக்கு அரசுதந்து நீ கானகம் செல் என்ற வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது தாமரையை வென்றது எனப் பொருள் காணல் நேரிது.

சடைத்தில் பூட்டிய எருதுகளை உருளுடை மனத்தவன் அவிழ்த்து விடுவித்தபோது, அவ்வெருதுகள் மகிழுமாறு மகிழ்ந்தான் என்ற மனநிலைதான் வென்றது என்ற சொல்லால் முதலில் சுட்டப்பட்டது.

நிலம் சுடுகிறது - நினைவும் சுடுகிறது :

மிகக் கடிய வெப்பம் கொண்ட காட்டை - வெவ்வழல் காடு என்று சொல்ல - சொன்ன சொல்லே வேகிறதே என்று சிந்தாமணியின் நயம் அமைகிறது.

விதிகண் டவரல் லதுமீது செலார்
வதிகொண் டதொர்வெவ் வழல்வாய் சொலின்வேம்

(சிந் 1186)

கம்பரும் இந்தக் கொடுமையை இப்படியே பாடுகிருர். தாடகை வாழும் வனம் பசையற்றிருக்கிறது. சிந்தாமணிச் சிந்தனை நெஞ்சில் பசுமையைத் தந்ததுபோலும்.

பருதிவானவன் நிலப்பசை அறப் பருகுவான்
விருது மேற்கொண்டு உலாம் வேனிலே அல்லதோர்
இருது வேறின்மையால எரிசுடர்க் கடவுளும்
கருதின் வேய உள்ளமும் காணின் வேம்நயனமும். (கம். 343)

சிந்தாமணி முத்துக்கள் கம்பர்வாக்கில் பின்னும் ஒளிபெறுகின்றன என்பதில் ஐயமுண்டோ!

(வளரும்)

கடிதம்

பா. சூரியநாராயணன் மதுரை 16,
20—5—90

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய பொன்னுரி திருவடிகளுக்கு. சந்நிதானத்தில் ஏற்பாடுசெய்திருந்தபுத்தொளிப் பயிற்சி வகுப்பில் இங்கிருந்து அங்கு வந்து 9—5—90 முதல் 11—5—90 வரை கலந்து கொண்ட ஐந்து பயிற்சி யாளர்களில் அடியேனும் ஒருவன். மூன்றாண்டுகளாகப் படித்துவந்த பல சைவ சமயக் கருத்துக்களையெல்லாம் தெளிவாக மீண்டுமொருமுறை விளக்கமாகக்கேட்டுப் பயனடைவதற்கு உதவியாக வல்லுநர்களைக் கொண்டு, தாங்கள் ஏற்பாடு செய்திருந்தது என்போன்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

புத்தொளி வகுப்பிலே உரையாற்றிய ஒவ்வொரு ஆசிரியரின் கருத்துக்களையும் என்குறிப்பேட்டில் எழுதிவைத்திருக்கிறேன் நிறைவு நாளன்று சந்நிதானத்தில் நிகழ்த்திய அரிய பேருரையில், அநுபூதி என்பது மெய்யுணர்வு என்றும், தத்துவம் என்பது கருவி என்றும், இறைவனும் உயிரும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கும் நிலைகளை விளக்கியும், கூறி அருளினீர்கள். மேலும் உயிரோடு ஆணவத்துக்கு உள்ள தொடர்பை ஓர் அழகிய உவமையின் மூலம் விளக்கியருளினீர்கள் :

''உடம்பில் எல்லாநோய்களும் இருக்கின்றன. ஆனால் அவை உடம்பின் ஆற்றல் குறைகிறபோது வெளிப்படுகின்றன. அதுபோல் திருவருள் வலுவுடையதாயிருக்கும் வரை ஆணவம் வெளிப்படாமல் அடங்கி இருக்கும்'' இந்த உவமையை நான் குறித்துவைத்து இங்குப் படித்துக்காட்ட, யாவரும்கேட்டுத் தெளிவடைந்தார்கள். என நன்றியையும் வணக்கத்தையும் மீண்டு செலுத்திக் கொள்ளுகிறேன்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. பிரமோதூத-வைகாசி-ஆயில்ய நாள் ஆலய வழிபாடு 30–5–90 புதன்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயிலில் நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கி வருளும் பெரியபுராண அருளுரை 3–6–90 ஞாயிறு காலை திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பூசலார் செய்த அகவழிபாட்டின் பெருமையையும் மங்கையர்க்கரசியாரின் சீலத்தால் பாண்டிய நாடு பெருமை அடைந்ததையும் நேசநாயனார் மனம் வாக்கு, காயம் ஆகியன இயைந்து செய்த வழிபாட்டின் பெருமையையும் உளங்கொள உணர்த்தியருளினார்கள்.

தருமை ஆதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. பிஎச். டி., தொல்காப்பியத்தில் 'உடம்படுமெய்' என்பது பற்றி விளக்கம் நல்கினார்கள். அடுத்து 8–7–90 அன்று 10 ஆவது அருளுபதேசம் நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக.

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் குருபூஜைப் பெருவிழா

தருமை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 6–5–90 அன்று தொடங்கிப்

பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதி யுலாக்காட்சி நிகழ்ந்தது. திருவீதியுலாவின் போது ஆதீன வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீனதேவஸ்தான ஓதுவா மூர்த்திகளும் வேதபாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினர்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 15—5—90 செவ்வாய்க்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது காலை தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களை வழிபட்டு ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தார்கள் நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அருச்சனை ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். "பதினொராந் திருமுறை" என்றநூல் பூஜையில் வைக்கப் பெற்றது. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்தியபின் நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது. குருபூசை விழாவில் அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 15—5—90 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மாலை 6-30 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன் திருபஞ்சனவீதியில் அமைந்திருக்கும் குருமூர்த்தங்களைத் தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறப்பெற்றது. குருமூர்த்த வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலெட்சுமி துர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத் திருநாளில் நிகழ்த்தப் பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப் பெற்றன. வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கொலு வீற்றிருந்து அருட்

காட்சி வழங்கியருளினார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர் பெருமக்களும் அன்பர்களும் தரிசித்து அருட்பிரசாதம் பெற்றுய்ந்தனர்.

பட்டினப் பிரவேசம் :

16—5—90 புதன்கிழமை பட்டினப் பிரவேசத் திருநாள். அன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. காலை சிவபூஜா துரந்தரர்கள் சிவபூஜை புரிந்த காட்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு தருமை ஆதீன இசைப்புலவர், தமிழக அரசுக் கலைஞர், டாக்டர் சீர்காழி திரு. கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிவிகையில் வலம் வந்து எழுந்தருளித் திருவுலாக்காட்சி தந்தருளினார்கள். தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர் பெருமக்களும் அன்பர்களும் உடன்வரத் திருவுலாக்காட்சி நடைபெற்றது. புகழ்பெற்ற கலைஞர்களின் நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்கத் திருவீதியுலாக் காட்சி நிகழ்ந்தது. தருமை ஆதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரண கும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக்காட்சி நிறைவு எய்தியதும் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருளி, அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு :

தருமை ஆதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவை ஒட்டி 6—5—90 முதல் 16—5—90 முடிய, திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6.30 மணிக்குத் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நடைபெற்றது. சாத்திர தோத்திர விரிவுரைகள், பண்டார சாத்திர விரிவுரைகள், அருளாளர் பனுவல் பற்றிய விரிவுரைகள் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், சிந்தனைமேடை முதலிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் மகாசந்நிதானம், சூரியனார்கோயில் ஸ்ரீ சிவாக்ரயோகிகள்

ஆதீனம் மகாசந்நிதானம், திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான் ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மற்றும் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர், பி. ஏ., பி. எல்., திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல்., திரு. இரா. சிவபுண்ணியம் பி. ஏ., பி. எல்., டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், எம். பி., பி. எஸ்., திரு. எஸ். பாஸ்கரன், பி. ஏ., பி. எல்., டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி., வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., திரு. வி. ஆறுமுகம் பிள்ளை, ஐ. ஏ. எஸ்., (ஓய்வு) திரு. இ. எஸ். கணபதி, பி. இ., ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியம் எம். ஏ., பிஎச். டி., திருமதி. சரோஜினி வரதப்பன், எம். ஏ., நகராட்சிஆணையர் திரு. இரா. வேலு, பி. ஏ., மயிலாடுதுறை சார்புநீதிபதி திரு. எம். ஜெயபால், பி. ஏ., பி. எல்., மயிலாடுதுறை கோட்டாட்சியர் திரு. சு. முருகையா, எம். ஏ., பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. ச. முத்துக்குமரன், எம். எஸ்சி. பிஎச். டி., அறப்பணிச் செல்வர் டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அமுதமொழிக் கொண்டல் திருமுருக கிருபானந்தவாரியார், இன்னிசை விரிவுரை ஆறு, ஏழு, எட்டாம் திருநாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. டாக்டர் திரு. எஸ். ஸ்ரீநிவாச சர்மா, எம். ஏ., பிஎச். டி., சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., திரு. தி. வ. கார்த்திமதிநாதன் பி. ஏ., (ஆனர்சு), பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனார், எம். ஏ., புலவர் திரு. செ. இராசு, எம். ஏ., மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., டாக்டர் திரு. து. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எட்., பிஎச். டி., டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பிஎச். டி., திருமதி. துரைவள்ளி, எம். ஏ., பி. லிட்., டாக்டர் திரு. சி. சிவசங்கரன், எம். ஏ., பிஎச். டி., புலவர் திரு. க. இராமகிருட்டிணன், எம். ஏ., எம். எட்., திரு. சாமி. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ., கண்ணூர் திரு. ம. வே. பசுபதி, எம். ஏ., வித்துவான் திரு. கா. குருசாமி, வித்துவான் திரு. சு. மூ. சுந்தரராசன், வித்துவான் திரு. நி. சு. சுந்தரராமன், புலவர்

திரு. கே. கணபதி, பி லிட்., பி. எட். திரு. ப. சிவநேசன், எம். ஏ., எம். ஃபில், வித்துவான் திரு. மு. வைத்தியநாதன், டாக்டர் திரு. வீ. நாகராசன், டாக்டர் திரு. சு. சுவாமிஐயா, திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., ஆகியோர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று விரிவுரை ஆற்றினர்.

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர் திரு. வி. பார்த்தசாரதி குழுவினரின் நாடகம், தஞ்சை திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினரின் இன்னிசை, மயிலாடுதுறை செல்வி லதா மாலினி மதிவாணன் மற்றும் மாணவியர் குழுவினரின் பரதநாட்டியம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவ மாணவியர் நாடகம், மயிலாடுதுறை ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபையினர் பொம்மலாட்டம், திருச்சேறை திரு. திருமங்கை தாசன் குழுவினரின் வில்லுப்பாட்டு, தருமை ஆதீன இசைப்புலவர் சீர்காழி டாக்டர். திரு. கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை ஆகிய நிகழ்ச்சிகள், சிறப்பாக நடைபெற்றன.

திருமுறை வேள்வி விழா

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரைநாளில் அப்பர் சுவாமிகள் பாடியருளியஐந்தாம் திருமுறை முற்றோதல் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில் சந்நிதியில் 27—5—90 ஞாயிறு காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 7 மணியளவில் நிறைவு பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடு ஆற்றி 5 ஆம் திருமுறை முற்றோதலை நிறைவு செய்து அருளாசி வழங்கினார்கள். ஓதுவாமூர்த்திகளும் புலவர்களும் கலந்து கொண்டு திருமுறை ஓதினர். உள்ளூர் அன்பர்களும் பிரமுகர்களும் பொதுமக்களும் செவிமடுத்துக் கேட்டுய்ந்தனர்.

திருச்சிராப்பள்ளி

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிடேக நினைவு சைவசித்தாந்த (மாலைநேரக்) கல்லூரியில் சிவபூசை - செயல்முறை விளக்கவிழா

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், திருச்சிராப்பள்ளி மௌனமடத்தில் நடைபெற்றுவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிடேக நினைவு,

சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரியின் ஆண்டு நிறைவு விழா, சிவபூசை முறைகள் - செயல்முறை விளக்க விழாவாக, 13–4–90 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்குத் தொடங்கிப், பிற்பகல் 2-00 மணிவரை நடைபெற்றது.

திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில், சிவத்திரு. அ. சொ. சுப்பையா, எம். ஏ., அவர்கள், சைவ அனுட்டானம், சிவபூசை முறைகள், மந்திரங்கள், முத்திரைகள் போன்றவைகளைத் தத்துவ. அறிவியல் விளக்கங்களுடன், பயிற்சியாளர்கள் முன்னிலையில், நேர்முக - செயல்முறை விளக்கமாகத் திருமுறை இன்னிசையோடு செய்துகாட்டினார்கள்.

மாலைநேரக் கல்லூரியின் பயிற்சியாளர்களும், சைவ அன்பர்களும் சிவபூசைச்செயல்முறை விளக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கண்டு மகிழ்ந்ததுடன், மிகவும் பயனுடைய செயல் என்று பாராட்டினார்கள். விழாவில் கலந்து கொண்ட அன்பர்கட்கு மாகேசுவரபூசை செய்விக்கப் பட்டது.

தருமபுரம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

கருத்தரங்கும், புத்தொளிப் பயிற்சி வகுப்பும்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் தருமை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைப் பெருவிழாவில் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் முதல் மூன்று நாட்களும் (6–5–90 முதல் 8–5–90 முடிய) கருத்தரங்கும், அடுத்த நான்கு நாட்களும் (9–5–90 முதல் 12–5–90 முடிய) புத்தொளிப் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றன.

கருத்தரங்கில் முதல்நாள் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கி முதல் நாள் கருத்தரங்கின் ஆய்வுப்பொருளாகிய திருமணத் தத்துவங்களைப் பற்றி அரிய பல கருத்துக்களை வழங்கியருளினார்கள். சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்ரயோகிகள் ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆசி வழங்கியருளினார்கள். திருமணத் தத்துவம், தருமை ஆதீனச்

செப்பேடுகள், சைவசித்தாந்தத்தில் கன்மம் ஆகிய முப்பொருள்களும் மூன்று நாட்களில் ஆய்வுப் பொருள்களாக அமைய, பேராசிரியர்கள் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் திரு. எஸ். ஸ்ரீநிவாச சர்மா, சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. சி. கோவிந்தராசனார், புலவர் திரு. செ. இராசு, மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திருமதி. ப. நீலா முதலிய அறிஞர்கள் பலரும் கருத்துரையாற்றினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம், தமிழகத்திலும், பாண்டிசேரி மாநிலத்திலும் இயங்கிவரும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரியில் பயின்றுவரும் பயிற்சியாளர்களுக்குப் பாடம் போற்றலும், கேட்டவை நினைத்தலும் வேண்டும் என்னும் குறிக்கோளுடன் 'புத்தொளிப் பயிற்சி வகுப்புக்கள்' நடைபெற்றன. இறை, உயிர், தளை, அறுவகைச் சமயங்கள், சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான சமய வரலாறுகள், சமய விழாக்களைப் பற்றிய தத்துவங்கள், பண்டார சாத்திரங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகிய பொருள்களில் சைவசித்தாந்தக் கல்லூரிப் பேராசிரியர்களான டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திருமதி ப. நீலா, டாக்டர். இரா. செல்வக்கணபதி, டாக்டர். மு. சிவச்சந்திரன், டாக்டர். கோமதி சூரியமூர்த்தி, வித்துவான் திரு. ம. சிவசம்பு, புலவர் மு. வைத்தியநாதன் ஆகியோர் பயிற்றுவித்தனர். 10-5-90 அன்று திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், 12-5-90 அன்று தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் பயிற்சி வகுப்பிற்கு எழுந்தருளி அருளாசி வழங்கியருளினர்கள். நிறைவு நாளன்று தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நிறைவுரைவழங்கியதோடு பயிற்சியாளர்களுக்கு உண்மை விளக்கம் எனும் அறிய ஞானநூலையும் வழங்கியருளினர்கள். 12-5-90 அன்று அமுதமொழிக்கொண்டல், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும் பயிற்சி வகுப்பிற்கு வந்திருந்து முப்பொருள் உண்மை பற்றி விளக்கினார்கள்.

✻ எதிர்காலம் ✻

ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூதவஸு ஆனிமீ 1உ முதல் 32உ முடிய)
(15—6—1990 முதல் 16—7—1990 முடிய)

பிரமோதூதவஸு ஆனிமீ 1. சுக்கிரவாரம் சதய நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 7 நாழிகை 26 விநாடிக்குக் கடக லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரிய பகவான் ரிஷபராசியிலிருந்து மிதுனராசி சங்கிரமணமாக ஆனி மாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று ஷடசீதி புண்ணிய காலம். சங்கிரமண வாராதிபதி சுக்கிரன் அர்க்காதிபதியாகி வருகிறார். ஆனிமாதம் 8 ஆம் தேதி சுக்கிரவாரம் 8 நாழிகை 30 விநாடிக்கு சூரியன் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசிப்பார். அன்றைய வாராதிபதி சுக்கிரன் மேகாதிபதியாகிறார். இவற்றின் பலனாவது உணவுப் பயிர்கள், வெளுமை வஸ்துக்களின் உற்பத்தி பெருகும். உலகில் அதிகமழை பொழிந்து நிலவளம் மிகும். உலகசுபிட்சம் நன்றாக இருந்துவரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோக பிரகாசத்தில் பரிமளிக்கின்ற சிவஞான குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் ஈஸ்வரகட்டளையில் உலகத்திற்கு பரமமாக அறம்பாலிப்பு உபதேசம் ஞான உபதேசம் அருளிச் செய்வார்கள். மாந்தர்கள் வேதங்கள், சாஸ்திரங்கள் அப்பியசித்து கலைஞானங்களில் உயரும் பொருட்டு வேதபாடசாலைகள் உயர்கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தி வித்யாதானத்திற்கு அனுக்கிரகம் செய்தருள்வார்கள் தேசங்களி எங்கும் தேவாலயங்களில் சிறப்போடு பூசனைகள் நடைபெற்று வரும். எல்லாமாந்தர்களும் ஈஸ்வரபக்தியில் திகழ்வார்கள்.

குருப் பெயர்ச்சி

குறிப்பு :— பிரமோதூதவஸு ஆனிமீ 31உ (16-7-90) பானுவாரம் அசுவதி நக்ஷத்திரத்தில் 59 நாழிகை 42 விநாடிக்கு பிராதக்காலத்தில் மிதுனலக்னத்தில் ஸ்ரீ குருபகவான் தனது உச்சஸ்தானத்தில் பெயர்ச்சியாகிறார். அதனால் எல்லா ராசியுடைய மாந்தர்களுக்கும் நலன்களே ஏற்படும்.

மீனம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம் இவ்விராசியை யுடையோருக்கு நல்ல அதிர்ஷ்டம் வரும். இளைஞர்களுக்குக் கல்வி கலைகளில் தேர்ச்சி, உத்தியோகவாய்ப்பு பதவி உயர்வு ஏற்படும். குடும்பதில் சுபிட்சம் ஏற்படும். மங்களகரமாக விவாகபிராப்தி புத்திரபிராப்தி நல்ல செல்வந்தம் அளிக்கும். மற்றைய இராசி யுடையோருங்கு மிச்சிரபலன் தரும். அவரவர் பிரவிருத்தியின் செயல ஆற்றலகளுக்கு ஏற்பவும் தெய்வீகத் தொண்டு பூர்வ புண்ணியத்திற்கு ஏற்பவும நற்பலன்கள் ஈஸ்வரன் அருள் செய் வார்.

குருபிரீதி :- எல்லா இராசியையுடையோரும் தேவாலயம் சென்று அருள்மிகு மேதா தெட்சணாமூர்த்தி சுவாமிக்கு சாஸ்திரோக்தமாக அபிஷேக ஆராதனைகள் செய்து சன்னதி யிலேயே வேதம் ஓதுவோருக்கு வஸ்திரதானம் சுவர்னதானம் செய்தும குரு பிரீதி நைவேத்திய பிரசாதம் சிறுர்களுக்கும் பக் தர்களுக்கும் விநியோகித்து வருவது குரு பிரீதியாகும். அதனுல் செல்வந்தம் பெருகும். குடும்ப சுபிட்சம் நன்றாக இருக்கும். ஆரோக்கியம் பிரபுத்துவம் நல்லவர்கள் நேசம் ஏற்பட்டு உயர்வு தரும். நலம் பல ஏற்படும்,

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் அதிகம் வந்துகொண்டிருக்கும். நல்ல இரத்தின பூஷணம் தரும். ஜுலை 5 தேதியின்மேல் நவீன இயந்திர சாதனம் அனுபோக பிராப்தியாகும். முன் செலவாக இருந்தவற்றிற்குமேல வரவு செய்யும. எல்லா நல்ல காரியங்களும் சமயோசித புத்தியில் நடத் தச்செய்யும். அரசாங்கத்தில் செல்வாக்கை உண்டுபண்ணும். தாரசௌக்கியம புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜுலை 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி -மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். பண வருமா னம் கணயஸ்திதியில் வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பும் சிவந்த வஸ்துபிராப்தியும் அளிக்கும். குடும்ப நலம் புத் திரர்களின் உயர்வுக்கு முக்கிய செலவினை ஏற்கும், ஜுலை 20 தேதியிலிருந்து சிறப்புப்பலன் அதிகம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் ஏற்பட்டுவரும். எல்லாக் காரியங்களையும் செவ்வையாக நடத்தச்செய்யும். ஜுலை 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

3 மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வரச்செய்யும். கல்வி, புத்திரிஸ்திரி வழியினர் நலன்கள், சுபவிசேஷங்களில் டாம்பீகம் அல்லது இலட்சியப்போக்கில் செலவினை ஏற்கச்செய்யும். ஜூலை 4 தேதியில் எழுத்துமூல விஷயங்களில் ஓர் நற்பலன் வருதல். நற்செய்தி வருதல் ஆகும். ஜூலை 15 முதல் நீடித்த சௌகரியம் வர உள்ளது. எல்லாக் காரியங்களையும் வெற்றியாக நடத்தத் தெய்வபலம் உள்ளது. ஜூலை 9,10 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4 கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்ரபலனை நடக்கும். பண வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் தரும். அரசாங்கம் விள பரம் பரோபகார தர்மகாரியங்களில் மதிப்பு மிக்கவற்றில் செலவினையும் செய்யும். ஜூலை 3 முதல் பூமி ஸ்திர சொத்துக்களில் நல்ல ஏற்பாடு செய்யும். வழக்கில் இருந்தவை வெற்றிகரமாகும். எல்லாக் காரியங்களும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி அருளில் கொடியாக நடந்து கொண்டிருக்கும். ஜூன் 15 ஜூலை 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலன் தரும் பண வருமானம் இராஜ கொடியில் வரவாகிக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்து மூலவிஷயங்களில் அரசாங்க நற்செய்தி வரும். பதவி உயர்வளிக்கும் சகோதரர் புத்திரர் பௌத்திரர்களுக்கு சுபம் தரும். வாகன சௌக்கியம் மேலாக இருந்துவரும். எல்லாக் காரியங்களையும் மனோலயப்படி நல்ல விதமாக நடத்தும். ஜூன் 16, 17 ஜூலை 13, 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் நிரம்ப வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ பலனை உண்டு பண்ணும். அரசாங்கத்தில் நற்புகழ் தரும். பொது மக்கள் வரவேற்பு, எங்கும் பிரதாபம் தரும். நவீனவாகன சௌகரியம் தரும். எல்லாக் காரியங்களையும் சிறப்பாக நடத்தும். புத்திரருக்கு உயர்வு தரும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு வரினும் ஜூலை 3 தேதியில் அது நீங்கி சுமுகம்

தரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம். ஜூன் 18, 19 ஜூலை 16 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் நல்லன ஏற்படும். இயந்திரசாதனம் நல்ல வாகனம் தரும் சகோதரர் பந்துமித்திரர்களால் அனுகூலங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர்களின் கல்வி கலைகளில் உயர்வளிக்கும். வழக்குகள் ஜெயமாகுதல், ரோகநிவர்த்தி ஆகுதலாகும். எல்லாக் காரியங்களையும் செவ்வையாகச் செயல்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் சொகுசுநிலவும். ஜூன் 20, 21 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜூன் 18 தேதியில் விசேஷ பலனை ஏற்படுத்தும். அரசு லிகிதம் வந்து பதவி உயர்வளிக்கும். ஜூலை 3 தேதியிலிருந்து எத்தனித்த எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாகி வரும். மறைமுக சத்துருவின் வஞ்சகம் பலியாது. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்து வரவும். ஜூலை 15 தேதி ஆகும். குருபெயர்ச்சி குடும்பத்தில் சுப விசேஷங்களைச் செய்யும். வயிற்று பாதை நீங்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் வரும். அதற்கேற்பச் செலவினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் ஜூன் 19 தேதியில் நல்லன ஏற்படுதலும், புதிய ஏற்பாடுகளும் ஆகும். முன் விலகியிருந்தவர் ஒருவர் சமயத்தில் மன ஒருமையில்வருவர். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10 மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜுன் 18 தேதியிலிருந்து சிறப்புப் பலனை ஏற்படுத்தும். நல்ல வாகனம் தரும். புத்திரிக்கு சுபம் தரும். எல்லாக்காரியங்களிலும் தெய்வ பலம் முன்னின்று நடத்தும். அரசு லிகிதம் வந்து மகிழ்ச்சியும் பதவி உயர்வும் தரும். தாம்பத்திய வாழ்வில் இல்லற தர்ம சுபிட்சமாக இருந்துவரும். ஜுன் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். அதிக செலவினமும் ஆகும். யதார்த்த உண்மைப்பேச்சில் மற்றவர் தங்களைபாதிப்பதாகக் கருதி காரியத் தடை செய்வர். அதில் ஜுலை 3 தேதியில் ஜெயம் தரும். வித்துவத்துவம்கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகங்களில் நல்ல புகழும் உயர்பதவியும் தரும். மனோபலத்தில் எல்லாக் காரியங்களையும் செயல்படுத்தும். ஜுன் 29, 30தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12 மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். தக்க விஷயங்களில் செலவும் ஆகும். பொன்மணி பூஷணம் அளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜுன் 20 தேதியில் ஓர் உயர்வு தரும். புகழாரம் சன்மானங்கள் அளிக்கும். அன்பர்களுக்கு உறுதிவாக்களித்தல் நிறைவு செய்ய அதிக ஈடுபாடாகுதல் ஆகும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுலை 15 தேதியில் குருபெயர்ச்சி நல்ல அதிர்ஷ்ட பிராப்தியாகும். ஜுலை 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-VI
பாடம் - 2.

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச் டி.,
தருமபுரம்.

முதன்மை நூல் :

மதுரையில் செந்தமிழ்ச்சொக்கன் பாகம் பிரியாப் பைந்தொடியாகக் கோயில்கொண்டு அருள்பாலித்து வருபவள் அங்கயற்கண்ணம்மை. மீனாட்சி என்பதுவட நூல்வழக்கு. தேவார காலத்தில் அங்கயற்கண்ணம்மை என்பதே பெருவழக்காகும். பிற்காலத்தில் மீனாட்சிஎன்ற வடநூல் வழக்கே போற்றப் பெற்றது. தமிழகத்துச் சக்தி பீடங்களுள் ஒன்றாகத் தொன்னூல்களுள் மதுரை குறிக்கப் பெறுகிறது. மதுரை மீனாட்சியம்மை மீது குமரகுருபரர் அருளிய புகழ்மிக்க சிற்றிலக்கியம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நூல் தலைப்பில் மீனாட்சி என்று காணப்படினும், நூலுள் ஆசிரியர் 'அங்கயற்கண்ணி' என்ற தூயதமிழ் வழக்கையே போற்றுகின்றார். தமிழில் எழுந்த இருபால் பிள்ளைத் தமிழ் நூல்களுள்ளும் முதன்மையானதாக அறிஞர்களால் போற்றப்பெறுவது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழே.

தருமை தந்த தவச்செல்வர் :

குமரகுருபரர் பிற்கால சிற்றிலக்கிய வளர்ச்சி வரலாற்றில் முதன்மை பெற்றுத் திகழ்பவர். மதுரை திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர். அம்மன்னரால் ஆதரிக்கப் பெற்றவர். செந்திற்கந்தன் திருவருளையும், அங்கயற்கண்ணம்மை தண்ணருளையும் நிரம்பப்பெற்றவர். தருமை ஆதீனம் நாலாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் துறவும், சிவதீக்கையும் பெற்றுத் தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவருள் ஒருவரானவர். ஆசாரியர் திருவடிகளில் 'பண்டார மும்மணிக்கோவை' படைத்துச் சூட்டியவர். ஸ்ரீகாசியில் குமாரசாமித் திருமடம் கண்டவர். இவர் அருளிய பதினன்கு

நூல்கள் இன்று கிடைத்துள்ளன. மதுரைக் கலம்பகம், சிதம்பரச் செய்யுட்கோவை, (செல்வ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், நீதிநெறி விளக்கம் முதலியன குறிக்கத்தக்க சிறப்பின.

அம்மைக்கு என எழுந்த அருட்பனுவல் :

குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்ற தொகுப்பில், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது. மதுரை மீனாட்சியம்மை குறம், மற்றும் மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை என்ற வேறு இருநூல்களும் அங்கயற்கண்ணம்மை மீது இவர் பாடியுள்ளார். இவற்றில் அல்லாது மதுரைக் கலம்பகம் என்ற நூலுள்ளும் அங்கயற் கண்ணம்மை தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. சைவ இலக்கிய வரலாற்றில், தொடக்க காலங்களில் உமைக்கெனத் தனிப்பாடல் பாடும் மரபு மேற்கொள்ளப் பெறவில்லை. உமை, விநாயகன், முருகன் பற்றிய செய்திகள் தேவாரத்துள் உண்டு ஆயினும், அவை சிவனைக் குறித்தெழுந்த பாடல்களுள், உள்ளடக்கமாகவே பாடப்பெற்றன திருவாசகத்தில், திருவெம்பாவையில் இடம் பெறும் ஒரு பாடலை உமைக்கென எழுந்த தனிப் பாடல் என்பர். இது ஏற்கத்தக்கதாயின் இவ்வளர்ச்சி, உமைக்கென எழுந்த ஒரு தனி இலக்கியமாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் நிறைவதாகக் கொள்ளலாம்.

பிள்ளைத்தமிழ் வரலாற்றுப் பார்வை :

தமிழுக்கென்றே சிறப்பாகக் குறிக்கத்தக்கச் சிற்றிலக்கிய வடிவங்கள் சிலஉண்டு, அவற்றுள் சிறந்தன கோவைத்தமிழும், பிள்ளைத்தமிழும். ஒட்டக்கூத்தரால் பிள்ளைத் தமிழ் முயற்சி அரும்பிற்று. அவரது (இரண்டாம்) குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே இன்று கிடைக்கப் பெற்றவையுள் பழமையானது. பாட்டுடைத்தலைவனைக் குழந்தையாக உளங்கொண்டு பாடும் மரபு பிள்ளைத் தமிழ் நூல்களுள் போற்றப் பெற்றது. 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' என்ற தொல்காப்பியத் தொடர் பிள்ளைத் தமிழ் நூல் முயற்சிக்கு வழிகோலியதாக உரைகாரர்கள் கருதுகின்றனர். பிள்ளை என்ற சொல் ஆண்மக்களைக் குறித்து வழங்குவது. பெண்பிள்ளை என்பதே மகளிர் குறித்து வருவது. தொடக்கத்தில் ஆடவர் சிறப்புக் குறித்து எழுந்த பிள்ளைத்தமிழ், வளர்ச்சி பெற்றுப் பிற்காலத்தில் பெண்தெய்வங்கள் மீதும் விரிந்தது. இவற்றைப் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்பர்.

மாறாத இலக்கிய வடிவம் :

மாற்றம் பெறாத தமிழ் இலக்கிய வடிவங்கள் பல தமிழில் உண்டு. பிள்ளைத் தமிழ் என்றால் பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள் பாடுவது என்று வரையறுக்கப்பட்டது. பெண்பாற் பிள்ளைத் தமிழ் என வந்த போது இறுதி மூன்று பருவங்களைப் பெண்கள் விளையாட்டுகளாக மாற்றிக்கொண்டனர். சிற்றில், சிறுபறை, சிறுதேர் உருட்டல் என்பவை, அம்மானை, நீராடல், ஊசல் என மாற்றிக் கொள்ளப்பெற்றன. தமிழில் எழுந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள், முற்குறித்த அமைப்பை இறுகப் பற்றியே எழுந்தன. பிற்காலத்தில் ஒருசிலர் சிறுமாற்றம் விளைத்தனர். மாற்றம் போற்றாத கட்டமைப்பில் எழுந்த பல நூறு பிள்ளைத் தமிழ்கள் எண்ணிக்கைக்கு உதவின. கற்போர் எண்ணத்தை அவை கவர்ந்தில. மிகப் பெரும் புலமையாளர்கள் மட்டுமே இவ்வகையில் வெற்றி கண்டனர். அவர்களுள் குறிக்கத்தக்கவர் குமரகுருபரர்.

காப்புப் பருவம் :

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 'கார்கொண்ட' என்று தொடங்கும் விநாயகக் கடவுள் வணக்கத்துடன் தொடங்குகிறது. பாடல்களுள் அடங்காது இப்பாடல் முற்கண் தனித்து நிற்கிறது. இது அல்லாது 'கைத்தலமோடு' என்று தொடங்கும் சித்தி விநாயகர் காப்பு ஒன்றும் காப்புப் பருவத்துள் மூன்றும் பாடலாக அமைந்துள்ளது. முன்னது நூல் சிறக்கவும், பின்னது, பாட்டுடைத் தலைவியைக் காக்கவும் வேண்டுவனவாக அமைகின்றன. முதலாவது காப்புப்பருவத்துள் 1. திருமால் 2. சிவபெருமான், 3. சித்திவிநாயகர் 4. முருகக்கடவுள், 5. பிரமதேவர், 6. தேவேந்திரன், 7 திருமகள், 8. கலைமகள், 9. துர்க்கை, 10 சத்தமாதர்கள், 11 முப்பத்து மூவர் எனப் பதினொருவர்க்குப் போற்றி சொல்லி, அங்கயற்கண்ணம்மையைக் காக்குமாறு வேண்டுகிறார் ஆசிரியர். உலக நாயகியைச் சிறு குழந்தையாகப் படைத்துக்கொண்டமை பற்றி அவ்வம்மையிலும் சிறிய தெய்வங்களிடம் அவளைக் காக்குமாறு வேண்டும் மரபு போற்றப் பெற்றதா? அல்லது மனிதக் குழந்தைகள் மீது பாடப் பெற்ற காலை, காக்குமாறு போற்றப்பெற்ற தெய்வங்கள், கடவுள் மீது பாடப் பெற்ற காலையும் அவ்வாறே போற்றப் பெற்றனவா என்பது தெளிவாகப் புலப்பட்டிலது இது அறிஞர்களின் ஆய்வுக்குரியது

வழக்குச் சொல் இலக்கியம் ஏறுதல் :

கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த காப்புப் பருவப் பதினொரு பாடல்களிலும், முதல் இரண்டு அடிகளில் காப்புத் தெய்வங்களின் சிறப்பும், பின் இரண்டு அடிகளில் அங்கயற் கண்ணம்மை அருளிப்பாடும் விதந்துரைக்கப்படுகின்றன. காப்புப் பருவத்தின் முதற்பாடல் காத்தல் கடவுளாகிய திருமாலையே முதன்மையாகக் கொண்டு வருதல் பிள்ளைத் தமிழ் மரபுகளுள் ஒன்று. ஆசிரியர் குமரகுருபரர், திருமாலின் தமிழ் அன்பைப்

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே"

என்று விதந்து, திருமழிசை ஆழ்வார் வரலாற்று நிகழ்வு ஒன்றை எடுத்துக்காட்டி நிறுவுகிறார். வழக்குச் சொல் இலக்கிய ஆட்சி பெறுவதை,

"குளிர்புனம் மொய்த்திட்ட சாரலிற் போய்ச்சிறு
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக் குமரனைப் போற்றுதும்"

எனவரும் முருகக்கடவுள் காப்பில் வைத்துக் காட்டுகிறார். இசுலாமியர் கலப்பால் வந்த 'சலாம்' என்ற சொல், முருகன் வள்ளியை வணங்கிய இடத்தில் கையாளப்படுவது ஒருநயமாகும்.

நூல் உள்ளடக்கம் :

தொடர்ந்து மரபுப்படி செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என ஒன்பது பருவங்களும், பருவத்துக்குப் பத்துப்பாடல்களும் அமைகின்றன. ஆக நூறு, காப்பு ஒன்று, காப்பில் மிகைப்பாடல் ஒன்று கூட்ட நூற்றி இரண்டு பாடல்களில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நிறைகிறது. நூல்முழுவதும் ஆசிரிய விருத்தயாப்பே போற்றப் பெற்றுள்ளது. நூலுள் குமரகுருபரரின் சிவபக்தி, தமிழ் அன்பு, வரலாற்றுத் திறம், சாத்திர உணர்வு, கற்பனை வளம், உவமை அழகு, உருவக உத்தி, புலமைத்தெளிவுயாவும் நிறைந்து காணப்படுகின்றன. பக்திக் கண்கொண்டு பயில்வார்க்கு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரிய பக்சுவை விருந்தாக நிறையும். தமிழ் யாப்பியல் பயில்வார்க்குக் கவிதை ஓட்டம் கற்கவும், அருள்பெற விழைவார்க்குப் பாராயணம் செய்யவும் துணை செய்யவல்லது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

அம்மை குறித்த அரிய தொடர்கள் :

அங்கயற்கண்ணம்மையை ஒவ்வோர் பாடல் நிறைவிலும் ஆசிரியர் விளிக்கும் முறை அழகார்ந்தது.

"தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி"

"அவனி தழைத்திட மவுலி புனைந்தவள்"

"தெளிதமிழ் மதுரையில் வளருமொா மிளமயில்"

"அருள் சூற்கொண்ட அங்கயற்கண் அமுது"

"சங்கம் வளர்ந்திட நின்ற பொலங்கொடி"

"தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி"

"குடைநிழலில் புவிமகளை வளர்த்தவள்"

"........தோன்றுந் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்த முழுமுதல்"

"முழுதுல குடையவொர் கவுரியர் குலமணி"

"மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு"

"ஆணிப்பொன் வில் விபுணர் மாணிக்கவல்லி"

"ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்"

"விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி"

"புழுகுநெய்ச் சொக்கர் திருவழகினுக் கொத்தகொடி"

மதுரைத் திருவிளையாடற் புராணம் விரிக்கும் மீனாட்சியம்மை அருள் வரலாற்றுச் செய்திகள் பலவும் மேற்கண்ட தொடர்களில் நிறைந்திருக்கும் பாங்கு நினைவு கூர்ந்து போற்றத்தக்கது.

வியந்து போற்றிய நயந்த தொடர்கள் :

மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் திருமலைநாயக்கர் முன்பு நிகழ்ந்தகாலை, இந்நூலின் வருகைப்பருவத்து, ஒன்பதாம்

பாடல் குமரகுருபரரால் பாடி அரங்கேற்றப் பெற்றபோது அங்கயற்கண்ணம்மையே சிறு பெண் குழந்தையாக எழுந்தருளி வந்து, மன்னன் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி ஆசிரியர்க்கு அணிவித்து மறைந்தார் எனவரலாறுபேசப்படுகிறது. வேதத்தின் பயன் அவளே என்பதை,

"தொடுக்கும் கடவுட் பழம்பாடலிற்
றொடையின் பயனே"

என்றும், தமிழின் சுவையும் அவளே என்பதை,

"...... ..நறைபழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே"

என்றும், யான், எனது என்றும் செருக்கறுத்த தூய அடியர் உள்ளத்து ஒளிரும் விளக்கும் அவளே என்பதை,

"......... அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே"

என்றும் அமையும் தொடர்கள் கற்பாரின் நெஞ்சை நெகிழ்விக்கும் தன்மையன.

"..........வித்தின்றி
விளைந்த பரமானந் தத்தின்
விளைவே .. .."

"காலத்தொடு கற்பனை கடந்த
கருவூலத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே........."

"........உயிரால
வாலத்து உணர்வுநீர் பாய்ச்சி
வளர்ப்பார்க்கு ஒளிபூத்து அளிபழுத்த
மலர்க் கற்பகமே........"

" துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த
முழுமுதலே………"

எனவரும் அரியதொடர்கள் ஆசிரியரின் பத்திமை, சாத்திரப் பேரறிவு, தமிழ் அன்பு முதலியனவற்றிற்கு நிறைவான சான்றுகளாகத் திகழ்கின்றன.

தமிழின் மீது தணியாத அன்பு :

குமரகுருபரரின் தமிழ்க்காதல் பெரிது. தமிழ் வேறு; சிவம் வேறு என்று கருதாத பண்பினர் அவர். அவரது தமிழ் அன்பை அவரின் படைப்புக்கள் யாவற்றிலும் கண்டு மகிழலாம். அங்கயற் கண்ணம்மையைத் தமிழாகவே போற்றுகின்றார்.

" மதுர மொழுகிய தமிழி னியல்பயில்
மதுரை மரகதவல்லி "

மதுரம் ஒழுகியதமிழ் என்று செம்மாப்பு அடைகிறார்.

" முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
முத்தன மேவுபெண்ணரசு "

என சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையை நினைகிறார். முற்குறித்தவாறு அம்மை

" தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி "

என்று பரவசமுறுகிறார்.

" தெய்வத் தமிழ்க் கூடல் தழையத் தழைத்தவள் "

என மதுரைக்குச் சிறப்புத் தமிழால் என்கிறார், அம்மை

" முழுதமி ழுததியில் வருமொரு திருமகள் "

எனத் தமிழ்க்கடலில் பிறந்த திருமகள் என வியக்கிறார்.

" ....நறைபழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே "

என தமிழின் சுவையே அம்மைதான் என்கிறார். குமரகுருபரனின் படைப்பில் தமிழே அவளாய், அவளோ தமிழாய் விரியும் திறம் புலப்படுகிறது.

ஒரு சிறு வாயில் :

ஆசிரியர் குமரகுருபரரின் கற்பனை ஆற்றலை அம்புலிப்பருவம் எல்லை இட்டுக் காட்டுகின்றது. நால்வகை உபாயங்களிலும் கவிஞர் கற்பனையில் எல்லை காணுகின்றார். சைவசித்தாந்தம் நூல் முழுதும் இழையோடுகிறது. திருமுறைத் தொடர்கள் ஆங்காங்கே இணைகின்றன. இந்நூல் புலமை மிடுக்கால் வந்த கற்பனை அன்று. பக்தி உறைப்பால் வந்த தெய்வீக மாலை. இதன் திறம் உரைக்க எழுந்ததன்று இக்கட்டுரை. ஒரு சிறு அறிமுகம். உள்ளே நுழைய அமைந்த சிறுவாயில். செந்தமிழும் சிவநெறியும் போற்றி வாழ்வார் சிந்தைக்கினிய அம்மை அருட்பனுவலை ஓதிவாழ்வோம்.

ஆனி மாதச் சிறப்பு நாட்கள்

15—6—90 வெள்ளி, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். ஷடசீதி - மிதுனரவி 7-26 பட்டீஸ்வரம் முத்துப்பந்தல்.

16—6—90 சனி, காலாஷ்டமி.

20—6—90 புதன், பிரதோஷம். கிருத்திகைவிரதம். தருமைஸ்ரீசண்முகர் அபிஷேகம். வேலூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை. சிதம்பரம், ஆவுடையார்கோயில் ஆனித்திருமஞ்சன உற்சவ [ஆரம்பம்.

21—6—90 வியாழன், மாத சிவராத்திரி.

22—6—90 வெள்ளி, சர்வ அமாவாஸை.

26—6—90 செவ்வாய், ஆயில்ய விழா. சதுர்-விரதம். தருமை ஆதீனம் 19 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் குருபூஜைகள்.

27—6—90 புதன், ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை.

28—6—90 வியாழன், சஷ்-விர-வியசிரா [?] இரவு ஸ்ரீநடராஜர் அபிஷேகம். அமர்நீதி நாயனர் குருபூஜை.

29—6—90 வெள்ளி, ஆனித் திருமஞ்சன தரிசனம். திருவையாறு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீகாலசம்ஹாரமூர்த்தி அபிஷேகம். தருமை ஆதீனம் 3 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

1—7—90 ஞாயிறு, 1400 ஆம் பசலி ஆரம்பம்.

2—7—90 திங்கள், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமிக்கு]சம்வத்ஸராபிஷேகம்.

5—7—90 வியாழன், பிரதோஷம்.

7—7—90 சனி, பௌர்ணமி விரதபூஜையில் முப்பழம் சாத்துதல். வியாசபூசை, சாதுர்மாஸ்யவிரத ஆரம்பம். காரைக்கால் மாங்கனிஉற்சவம். ஆடிமாதம் கிரஹண தோஷமிருப்பதால் யஜுருபாகர்மா செய்ய உத்தமம்.

10—7—90 செவ்வாய், சிரவண விரதம், வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ வைத்யநாதசுவாமிக்கும், சிறுகாட்டூர் ஸ்ரீசித்திவிநாயகருக்கும், சம்வத்ஸராபிஷேகம்.

11—7—90 புதன், சங்கட ஹரசதுர்த்தி, திருப்பறியலூர் ஸ்ரீவீரட்டேசுவர சுவாமிக்கும், திருக்குவளை ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம்.

14—7—90 சனி, மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீவதான்யேசுவர சுவாமிக்கும், ஸ்ரீகாசி விசுவநாதசுவாமிக்கும் சம்வத்ஸரா [அபிஷேகம்.

15—7—90 ஞாயிறு, மெய்ப்பொருள் [?] கலிக்காமர் குருபூஜை.

16—7—90 திங்கள், தக்ஷிணாயண மாதப் பிரவேசம். புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம் கடகரவி 44-04. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி அபிஷேகம். சீர்காழி உமாமகேசுவரருக்கு, உச்சிக்காலத்தில் புழுகாப்பு. வேலூர், சீர்காழி, நாகை, திருவையாறு, மதுரை, திருக்கடவூர் முதலியதலங்களில் ஆடிப்பூர மகோற்சவ ஆரம்பம். வேலூர் சீதளகும்பம் பூர்த்தி.

வெளியீடு Regd. No. TN / M.M.

சிவமயம்

தருமை ஆதீனம் சிறப்பு நிகழ்ச்சிகள்

தருமை ஆதீனம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில்

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி ஆலயத்தில்

திருமுறை வேள்வி

(ஆறும் திருமுறை முற்றோதல்)

23—6—90 சனிக்கிழமை காலை 7 மணி தொடங்கி இரவு 7 மணி வரை நிகழும். திருமுறை இசைவாணர்கள் புலவர்கள் திருமுறை விண்ணப்பம் செய்வர்.

இரவு 7-30 மணிக்கு

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

எழுந்தருளி வழிபாடாற்றித் திருமுறை முற்றோதலை நிறைவு செய்து அருளுரை வழங்குவார்கள்.

ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடு

ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் நாண்மங்கலவிழாநாளாகிய 26—6—90 செவ்வாய்க்கிழமை கீழ்வேளூருக்கு அருகிலுள்ளதும் திருவிசைப்பா திருப்பதிகம் பெற்றதுமாகிய திருச்சாட்டியக் குடியில் சிறப்புவழிபாடு நடைபெறும்.

பெரியபுராண அருளுரை

1—7—90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் தருமை ஆதீனத் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆங்கிலமாத முதல் ஞாயிறுதோறும் வழங்கிவரும் பெரியபுராண அருளுரை நிகழ்வுறும்.

அன்பர்கள் வந்து தரிசித்தும் கேட்டும் பயன் எய்துவார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-6-90